Registered as a Newspaper in Srilanka

விலை ரூபா: 15.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 11 வெள்ளிக்கிழமை (24.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# இலங்கைப் பிரச்சினையில் திருப்பம் அடுத்த 48 மணிநேரத்தில் ஏற்படும்

## அமெரிக்கா கூறுகிறது

(வாஷிங்டன்)

இலங்கையில் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதலை நிறுத்துவது குறித்து 48 மணிநேரத்துள் தீர்க்கமான ஒரு முடிபு ஏற்பட்டு, அப்பிரச்சினையில் ஒரு திருப்பம் வருமென அமெரிக்க வெளியுறவு அமைச்சக அதிகாரி மைக்கல் ஒவன் எதிர்வு கூறியுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவர் பிரபாகரனை பிடிப்பதற்கான தாக்குதல் ஆரம்பம்

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட அந்த அமைப்பின் முக்கிய தலைவர்களை சுற்றி வளைத்துப் பிடிப்பதற்கு இராணுவம் கடைசிக்கட்ட நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

தற்போது 8 சதுர கி.மீ பரப்பளவுக்குள் புலிகள் சுற்றி வளைக்கப்பட்டு தேடப்பட்டு வருவதாக இராணுவம் தெரிவித்துள்ளது.


பிரபாகரனும் அவரது சகாக்களும் கடல் மார்க்கமாக (12ஆம் பக்கம் பார்க்க)

## விஜய் நம்பியார் பின்னர் இணக்கம்

(லண்டன்)

இலங்கையில் தற்போது தோன்றியுள்ள நிலை தொடர்பாக ஆராய்வதற்கு இலங்கை வந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பிரதம அதிகாரி விஜய் நம்பியார் பாதுகாப்பு சபை கூட்டத்தில் கருத்த தெரிவிக்க மறுப்பு தெரிவித்திருந்த போதும் பின்னர் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக ஐ.நாவின் (12ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தத்தை வலியுறுத்த இன்று மேனனும் நாராயணனும் வருகின்றனர்




சிவ்சங்கர் மேனன்

(புதுடில்லி)

இலங்கையில் நடந்து வரும் சம்பவங்கள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள இந்திய மத்திய அரசு, போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என இலங்கை அரசை வலியுறுத்துவதற்காக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே நாராயணன் மற்றும் வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன் இன்று கொழும்புக்கு வருகின்றனர். இலங்கை வரும் இவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேசவுள்ளனர்.

இலங்கையில் மோதல்கள் அதிகரித்து வரும் நிலையில் அப்பாவி தமிழர்கள் பலர் கொல்லப்படுவதால் எழுந்துள்ள நெருக்கடி நிலை தொடர்பாக ஆராய இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் (12ஆம் பக்கம் பார்க்க)



நாராயணன்

## வன்னியில் நேற்று 287 பொதுமக்கள் பலி அருட் தந்தை உட்பட 300 பேர் காயம்

(வவுனியா)

புதுக்குடியிருப்புப் பகுதிமீது நேற்று நடத்தப்பட்ட அகோர எறிகணைத் தாக்குதல்களில் 287 பொதுமக்கள் உயிரிழந்ததுடன் கியூடெக்-கரிதாஸ் நிறுவனப் பணிப்பாளர் அருட்தந்தை வசந்தசீலன் அடிகளார் உட்பட 300க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

வலைஞர்மடம், அம்பலவன்பொக்கணை ஆகிய பகுதிகள் மீது நேற்று வியாழக்கிழமை செறிவான எறிகணை, ஆர்.பி.ஜி. உந்துகணை மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இத் தாக்குதல்களில் காயமடைந்த கியூடெக் -கரித்தாஸ் நிறுவனப் பணிப்பாளர் அருட்திரு.வசந்தசீலன் அடிகளார் தனது கால் ஒன்றை இழந்துள்ளார்.

இத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களில் 287 பேரின் சடலங்கள் முள்ளிவாய்க்கால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. (12ஆம் பக்கம் பார்க்க)

## மோதலுக்கு முடிபுகட்ட ஐ.நா. கோருகிறது

(வாஷிங்டன்)

விடுதலைப் புலிகள் உடனடியாக சரண் அடைந்து, பயங்கரவாதத்தை கைவிட்டு, பேச்சுவார்த்தை மூலம் ஜனநாயக பாதைக்கு திரும்புவதன் மூலம் இலங்கையில் பல ஆண்டுகளாக நடந்துவரும் இன மோதலுக்கு முடிபு ஏற்படுத்த வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அறிவுறுத்தி உள்ளது.

போர் முனையில் இருந்து வெளியேறும் அப்பாவித் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் அவசரமாக புதுடில்லிக்கு அழைப்பு

(கொழும்பு)

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்தை நேற்று அவசரமாக புதுடில்லிக்கு அழைத்துள்ள இந்திய அரசாங்கம், வன்னி நிலைமைகள் தொடர்பாக அவருடன் முக்கிய் ஆலோசனைகளை நடத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் வெளிவிவகாரத்துறை செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் அலோக் பிரசாத்துடன் முக்கிய ஆலோசனைகளை நடத்தியுள்ளனர்.

வன்னி போர் நிலைமை, போரால் பாதிக்கப்பட்ட மக்களுடைய நிலைமை என்பன தொடர்பாக அலோக் பிரசாத்திடம் இருந்து அவர்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசின் கோரிக்கைகளை அரசும் புலிகளும் மதிக்கவில்லை

### சிதம்பரம் குற்றச்சாட்டு



(புதுடில்லி)

மோதல்களை நிறுத்துமாறு இந்தியா தொடர்ச்சியாக விடுத்துவந்த கோரிக்கையை விடுதலைப் புலிகளும் இலங்கை அரசாங்கமும் மதிக்கவில்லை என இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விவகாரம் இந்.-பிரி. ஆலோசனை

(லண்டன்)

இலங்கை பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பது குறித்து இந்தியாவுடன் பிரிட்டன் பேச்சு நடத்தி வருகின்றது.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிபான்ட் கூறியதாவது, இலங்கை பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாது என்பதில் பிரிட்டன் தெளிவாக உள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து வந்த 11,147 பேர் நலன்புரி நிலையங்களில் தங்க வைப்பு

### யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதியிலிருந்து மூவாயிரத்து 698 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 147 பொதுமக்கள் யாழ்ப்பாணத்திலுள்ள தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, வன்னியில் இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்து படகுகள் மூலம் நேற்று (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நலன்புரி நிலையங்களிலுள்ளவர்களை காண உறவினர்கள் முண்டியடிப்பு

## அனுமதி இல்லாததால் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை பார்வையிடுவதற்கு அவர்களது உறவினர்கள் முண்டியடிக்கின்றனர். எனினும் அதற்கு அனு மதியளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னிப்பகுதியிலுள்ள உறவினர்களின் நிலை குறித்தும் யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ளவர்களின் நிலை குறித்தும் அறிந்து கொள்ள பெருமளவான உறவினர்கள் ஏக்கத்துடன் உள்ளனர்.

இதற்காக அவர்கள் ஒவ்வொரு நலன்புரி நிலையத்திற்கும் தினமும் அலைந்து திரிகின்றனர். ஆனால் அவர்கள் தமது உறவினர்களை சந்திக்க முடிவதில்லை என கூறப்பட்டது.





காலை முதல் மாலை வரை கால்கடுக்க கொளுத்தும் வெயிலில் காத்திருந்த போதும் எவருக்கும் அனுமதி கிடைப்பதில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உடு புடைவைகள், உணவுப் பொருட்கள் என்பவற்றுடன் பெருமளவான மக்கள் நலன்புரி நிலையங்கள் உள்ள பகுதிகளில் குவிந்திருப்பதை காணக்கூடியதாகவும் இருந்தது.

அத்துடன் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தென்மராட்சி பகுதிக்கு மக்கள் படை எடுப்பதாக போக்குவரத்து வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை தமது உறவினர்கள் யாராவது தம்மைப் பார்ப்பதற்கு வருகிறார்களா என்பதை அவதானிப்பதற்காக நலன்புரி நிலையங்களில் உள்ள தண்ணீர் தாங்கிகள் கொட்டகைகள் என்பவற்றின் மீது ஏறி நிற்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் நலன்புரி நிலையங்களில் உள்ளமக்களை அவர்களது உறவினர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களிடம் உற வினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-5)

# குண்டெறிதல் பயிற்சி சாவகச்சேரியில்

(சாவகச்சேரி)

குண்டெறிதல், தட்டெறிதல் போன்ற மைதான விளையாட்டுகளுக்கு வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை மீசாலை வீர சிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெற இருந்த பயிற்சிகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் என தென்மராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-29)

# போட்டிகள் ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த சைவ நாடகப் போட்டிகள் பிற்போடப்பட்டுள்ளதாகவும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-29)

# உயர் தொழில் நுட்ப நிறுவன பழைய மாணவர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு உயர் தொழில் நுட்பவியல் நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பழைய மாணவர் சங்க செயலாளர் வி. தயாபரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு வசதியாக அன்று 10 மணிக்கு பஸ் நிலையத்திலிருந்து விசேட பஸ் சேவையும் இடம் பெறவுள்ளது. (ச)

# பராமரிப்பு எதுவுமின்றி வெளியிணைப்பு இயந்திரங்கள்

(யாழ்ப்பாணம்)

கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வடமராட்சி முனைப் பகுதிக்கு வந்த மக்களின் படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பன பராமரிப்பு எதுவுமின்றி போடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல இலட்சம் ரூபாய் பெறுமதியான இவ் உபகரணங்களை பாதுகாக்க எவரும் முன்வராததால் அவை பழுத டையும் நிலை காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

அண்மைய சில நாட்களில் வன்னியிலிருந்து படகுகள் மூலம் முனைப் பகுதியை வந்தடைந்த மக்கள் யாழ்ப்பாணத்திலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்கள் வந்த சுமார் 200 படகுகள், அவற்றுக்கான வெளியிணைப்பு இயந்திரங்கள் மற்றும் எரிபொருட்கள் என்பன முனைப் பகுதியில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

# போக்குவரத்து விதிமுறைகளால் வீதி விபத்துக்கள் குறைந்துள்ளன

## யாழ். பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட போக்குவரத்து விதிமுறைகளால் வீதி விபத்துக்கள் குறைவடைந்துள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றொசான் பெர்னான்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, யாழ். மாவட்டத்திலுள்ள 9 பொலிஸ் பிரிவுகளிலும் போக்குவரத்து விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

நீதிமன்றத்தில் அனுமதிபெற்று யாழ்ப்பாண அரச அதிபர், பொது அமைப்புக்களின் ஒன்றியம் மற்றும் பொதுமக்களிடம் பொலிஸ் அதிகாரிகள் கலந்துரையாடி இவ்விதிமுறைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். யாழ்ப்பாண மாநகர சபையின் உதவியுடன் வீதி விதிமுறைகள் தொடர்பான பலகைகள் மஞ்சள் கோட்டுக்கடவைகள் என்பன வீதிகளில் வரை யப்பட்டுள்ளன.

பொலிஸ் உத்தியோகத்தர்களை முழு நேர கடமையில் ஈடுபடச் செய்து மக்களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் முதலாம் திகதிக்கு பின்னர் போக்குவரத்து விதிமுறைகளை மீறுபவர்கள் மீது சிறிய தண்டனைகள் விதிக்கப்படுகின்றன.

மேலும் பாடசாலை ரீதியாக மாணவர் களுக்கு போக்குவரத்து விதிமுறைகள் பற்றிய விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் வீதி விபத்துகள் குறைவடைந்துள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் (SSP) றொசான் பெர்னான்டோ மேலும் தெரிவித்தார். (ச-7)

# 74 பவுண் தங்க நகைகளுடன் பொலிஸாரிடம் சிக்கிய திருடர்

## அச்சுவேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரவு வேளையில் 74 பவுண் தங்க நகையுடன் சென்ற திருடர்கள் இருவர் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர். இச் சம்பவம் கடந்த 17ம் திகதி இரவு 8 மணியளவில் அச்சு வேலி கிழக்கு பிள்ளையார் கோவிலடியில் இடம் பெற்றுள்ளது.

சம்பவதினத்தன்று பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதலில் ஈடுபட்டிருந்த வேளை சந்தேகத்துக்கிடமான இருவரை கைது செய்து கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது கைது செய்யப்பட்ட இருவரும் கோப்பாய் பகுதியில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவத் துடன் தொடர்புடையவர்கள் என தெரியவந்தது.

இத் திருடர்கள் கோப்பாய் பகுதியில் மூன்று வீடுகளை உடைத்து 18 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகைகளையும் பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளையும் திருடினார்கள் என்ற தகவலும் வெளியானது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட 24 மணி நேர விசேட நடவடிக்கையின் போது இத் திருடர்களுடன் தொடர்புடைய ஏனைய இரண்டு திருடர்களின் மனைவியரையும் நகைக்கடை ஒன்றின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டு 18ஆம் திகதி யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ் வழக்கினை விசாரணை செய்த நீதிவான் ஆர். வசந்தசேனன் பிரஸ்தாப நபர்கள் ஐவரையும் எதிர்வரும் 30 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச-7)

# பாடசாலை கல்வி நடவடிக்கைகள் 27ஆம் திகதி ஆரம்பமாகும்

## வடமாகாண கல்வித் திணைக்களம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளின் இரண்டாம் தவணை கல்வி நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் யாழ் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளது.

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறும் இடம் பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு மாற்று நடவடிக்கை எடுக்குமாறும் கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரண்டாம் தவணை முடிபில் நடைபெறவுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த உயர்தரப் பரீட்சை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# தென்மராட்சியிலிருந்து 600 பேர் நெல்லியடி மகா வி.க்கு மாற்றம்

(வடமராட்சி)

வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி நலன்புரி நிலையங்களில் இருந்த சுமார் 600 பேர் நேற்றிரவு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மேலும் 600 பேர் இந்த முகாமுக்கு இன்று அழைத்து வரப்படவுள்ளதாக கரவெட்டி பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் தெரிவித்தார்.

தென்மராட்சிலுள்ள நலன்புரி முகாம்களில் அதிகமானோர் தங்க வைக்கப்பட்டுள்ளதால் அவர்களில் ஒரு தொகுதியினர் நேற்று வடமராட்சிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான ஆரம்பகட்ட அத்தியாவசிய தேவைகளை கரவெட்டி பிரதேச செயலகம் மேற்கொண்டுள்ளது.

இதனை விட மேலதிக மலசலகூடம், மின்சாரம், குடிநீர் போன்றவற்றை இச் செயலகம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. (ச-10,14)


# தவறிவிட்டது

தர்மலிங்கம் மகேஸ்வரி என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 497230748V) 11.04.2009 அன்று யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதி பஸ் பிரயாணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.

*தொடர்பு:* பிளேக் றோட், சங்கானை.

T.P.021 4590042 (C-2393)

# இன்று ஒரு தகவல்

## அதிக ஆசை

ஒரு இளைஞன் வேலை தேடி பட்டணத்துக்கு வந்தான். எங்கு தேடியும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு ஆள் இவனை வேலைக்குச் சேர்த்துக் கொண்டார்.

முதலில் எந்த வேலையும் கொடுக்கவில்லை. பின்னர் ஒரு நாள் இவனைக் கூப்பிட்டு ஒரு எருமை மாட்டுத் தோலை கொடுத்தார்.

அவனும் ஏன் எதற்கு என்று கேட்காமல் அதை வாங்கிக் கொண்டான். பின்னர் அவர் நான்கு கோணிப் பைகளை எடுத்துக் கொண்டார். ஒரு ஒட்டகத்தையும் ஏற்பாடு செய்தார்.

இவனையும் கூட்டிக்கொண்டு ஒட்டகத்தில் ஏறி ஒரு பெரிய செங்குத்தான மலையை அடைந்தார்.

அங்கு மாட்டுத்தோலை கீழே விரித்து அதில் அவனை படுக்க வைத்தார்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் முதலாளி சொல்கிறார் என்பதற்காக படுத்துக் கொண்டான்.

உடனே அவர் அந்த எருமை மாட்டுத் தோலை நான்கு பக்கமும் எடுத்து ஒன்றாக சேர்த்துக் கயிற்றால் கட்டினார். உள்ளே அந்த இளைஞன்.

அவனை அப்படியே கட்டிப் போட்டு விலகி வந்தார். ஒரு மரத்துக்குப் பின்னால் ஒளிந்து கொண்டார். அங்கே கட்டிப் போட்டது ஒரு எருமை மாடு மாதிரித் தெரிந்தது.

சிறிது நேரத்தில் இரண்டு பெரிய கழுகுகள் அங்கே பறந்து வந்தன. அந்த எருமைத் தோல் மூட்டையை அப்படியே தூக்கிக் கொண்டு உயரப் பறந்தன. அந்த செங்குத்தான மலை உச்சியில் அதை வைத்து அலகால் கொத்தி அவிழ்த்தன. உள்ளேயிருந்து ஒருவன் வெளியே வருவதைப் பார்த்ததும் அந்தக் கழுகுகள் பயந்தோடின.

அந்த இளைஞன் எழுந்து பார்த்தான் அவன். காலடியில் ஏராளமான நவரத்தினங்கள் கொட்டிக் கிடந்தன.

கீழே நின்று கொண்டிருந்த முதலாளி கத்தினார்.

"ஏன் சும்மா நின்று கொண்டிருக்கிறாய்? உன் காலடியில் கிடக்கும் கற்களைப் பொறுக்கிக் கீழே போடு" என்றார்.

அவன் போட ஆரம்பித்தான்.

நான்கு சாக்கும் நிரம்பியது. சேர்த்துக் கட்டி ஒட்டகத்தின் மேல் வைத்துக்கொண்டு போவதற்கு ஆயத்தமானார் அவர்.

"முதலாளி... நான் எப்படி கீழே இறங்கி வருவது?" என்றான்.

"முட்டாளே... என்னுடைய வேலையாட்களுக்கு எப்படி வேலை கொடுக்கிறேன் என்பது புரியவில்லையா? அங்கே மலையுச்சியின் பின்னால் திரும்பிப் பார். எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது புரியும்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

அவன் திரும்பிப் பார்த்தான். அங்கே ஏராளமான எலும்புக் கூடுகள் கிடந்தன. தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தான்.

சிறிது நேரத்தில் ஒரு கழுகு தலைக்கு மேல் பறந்து வந்தது. இவன் சாமர்த்தியமாக ஒரே தாவாகத் தாவி அதனுடைய கால்களைப் பிடித்துக் கொண்டான்.

கழுகு பயந்து போய் மேலே பறந்தது. கடைசியில் களைத்துப் போய் ஓரிடத்தில் கீழே இறங்கி விட்டது. அவன் தரையில் குதித்து தப்பித்துக் கொண்டான்.

சிறிது நாட்களின் பின் மறுபடியும் பழைய முதலாளியிடமே வேலை கேட்டான்.

அவருக்கு இவனைப் பார்த்ததும் ஒரே ஆச்சரியம்! இருந்தாலும் இவன் வேறு யாரோ. அவன் சாயலில் இருக்கிறான் என நினைத்து வேலையில் சேர்த்துக் கொண்டார்.

இரண்டு நாட்களின் பின் நான்கு சாக்கு, எருமைத் தோல் சகிதம் இவனையும் அழைத்துக் கொண்டு போனார்.

எருமைத் தோலை தரையில் விரித்து படுக்கச் சொன்னார். உடனே இவன் புத்திசாலித்தனமாக, முதலாளி... எனக்கு இதில் எப்படிப் படுப்பது என்று தெரியவில்லை. நீங்கள் கொஞ்சம் படுத்துக் காட்டினால் நல்லது" என்றான்.

அவரும் யதார்த்தமாக இது கூட தெரியவில்லையா என்று சொல்லிக் கொண்டு அதில் படுத்தார். அவ்வளவு தான்... உடனே இவன் திடீரென அப்படியே சுருட்டி கயிற்றால் கட்டி விட்டான்.

சிறிது நேரத்தில் இரண்டு கழுகுகள் வந்து தூக்கிக் கொண்டு போய் நவரத்தின மலை உச்சியில் போட்டு விட்டது. முதலாளி வெளியே வந்தார்.

"நேரத்தை வீணாக்காமல் இரத்தினக் கற்களையெல்லாம் பொறுக்கி கீழே போடுங்கள்" என்றான். அவன் பழைய ஆள் என்பது அவருக்குப் புரிந்து விட்டது.

"அதுசரி மலையுச்சியிலிருந்து எப்படி கீழே வந்தாய்?" என்றார்.

"முதலில் இரத்தினக் கற்களைப் போடுங்கள். பின்னர் சொல்கிறேன்" என்றான்.

பொறுக்கிப் போட்டார். நான்கு சாக்குகளிலும் கட்டிக் கொண்டு ஒட்டகத்தில் ஏறிப் புறப்பட்டான்.

"தப்பிக்கும் வழியைச் சொல்?" என்று முதலாளி கத்தினார்.

"பின்னால் இருக்கும் எலும்புக் கூடுகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான் இவன்.

இது ஒரு துர்க்மேனிய நாட்டுக் கதை. அதிகமாக ஆசைப்பட்டால் ஆபத்து வந்து சேரும் என்பதை உணர்த்துவதற்காக சொல்லப்பட்ட கதை இது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இடம்பெயர்ந்த மக்களைப் பராமரிப்பதில் பாரிய சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது

## முற்கூட்டிய திட்டங்கள் எதுவும் இல்லையென அரசசார்பற்ற நிறுவனங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்பாராத விதமாக வன்னியிலிருந்து குறுகிய காலப்பகுதியில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேறியிருப்பதால் அவர்களைத் தங்கவைப்பதிலும் அவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளன.

கடந்த 6 மாத காலப்பகுதியில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த 50 ஆயிரம் பேரைத் தங்க வைப்பதற்குப் போதியளவு இடவசதிகளோ அவர்களுக்கு வழங்குவதற்கான அடிப்படை வசதிகளோ போதுமான அளவில் இல்லையெனவும் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு அர சாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வந்ததாகவும் கூறப்பட்டது.

இவ்வாறு ஏற்கனவே வந்த 50 ஆயிரம் பேரைப் பராமரிப்பதிலேயே சிக்கல்களை எதிர் கொண்டிருக்கும் நிலையில் மூன்று நாட்களுக்குள் மேலதிகமாக வந்திருக்கும் ஒரு இலட்சம் பேரைப் பராமரிப்பது தொடர்பில் அரசாங்கத்திடமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களிடமோ முற்கூட்டிய திட்டங்கள் எதுவும் இல்லையென அரச சார்பற்ற நிறுவனங்கள் கூறுகின்றன.


இந்த நிலையில் புதுமாத்தளன் பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஒரு இலட்சம் பேர் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, புளியங்குளம் மற்றும் ஓமந்தை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருப்பதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கான உணவை அரசாங்கமும், அரச சார்பற்ற நிறுவனங்களும், இராணுவத்தினரும் வழங்கி வருவதாகத் தெரியவருகிறது.

இவ்வாறு தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே வவுனியாவுக்கு அழைத்து வரப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்கள் சோதனைக்கு உட்படுத்தப்படும் இடத்தில் ஐ.நா. பணியாளர்களின் பிரசன்னம் அவசியம் என ஐக்கிய நாடுகள் சபை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதுடன், இதுவரை ஐ.நா. பணியாளர்களுக்கு அரசாங்கம் உரிய அனுமதி வழங்கவில்லையென ஐக்கிய நாடுகள் சபையின் மனித நேய விவகாரங்களுக்கான பிரதித் தலைவர் கத்தரின் ப்ரக் பாதுகாப்புச் சபையில் குற்றஞ் சாட்டியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஓ-6)



புது வருடத்தை முன்னிட்டு இலங்கைவங்கி பருத்தித்துறை கிளையில் இடம்பெற்ற புதுவருட கொடுக்கல் வாங்கலில் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்னம் வைப்புச் செய்த வாடிக்கையாளர் ஒருவருக்கு கைவிசேடம் வழங்குவதையும், அருகில் கிளை முகாமையாளர் திருமதி சு. பிரபாகரன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# க.பொ.த சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள்

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

செ. அனுதர்ஷா, ப. மயூரி–9A, ந. நிறோஷா, ஜெ. திவ்யா–7A,2B, பா. தேனுவதனி–6A,3B, சி. ஆராதனா –6A,B,2C, சு. தரணிகா–6A,2B,C, கு. பிரியங்கா–5A,4B.

ம. நிரோஜா–5A,2B,2C, வி. அமிர்தப்பிரியா–5A,3B,S, மு. ஐதுநந்தா–5A,2B,2C, ம. சிந்துஜா–5A, 3B,C, கு. அபர்ணா–5A,2B,C,S, சி. சிந்துகா –5A, B,2C,S, க. நிவேதா–4A,4B,C, சி. நிருஷா–4A,4B,S, த. திருமகிழினி–4A,2B,2C,S, சி. சர்மிளா–4A,3B,C, S, ச. துவாரகா–4A, 2B,2C,S.

(ஓ)

# இராசி பலன்

*24.04.2009*
*(சித்திரை 11, வெள்ளிக்கிழமை)*
*சதுர்த்தசி முற்பகல் 10.40 மணிவரை*
*ரேவதி பிற்பகல் 1.49 மணிவரை*
*இராகுகாலம் 10.30-12.00 மணிவரை*
*சுபநேரம் 6.00-7.30 மணிவரை*
*அமாவாசை விரதம்*

| | |
|---|---|
| மேடம் | சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, தெய்வ தரிசனம், போசன சுகம். |
| இடபம் | பிரயாணம், முயற்சி தாமதம், நண்பர்கள் சந்திப்பு, தெய்வ சிந்தை. |
| மிதுனம் | பெரியோர் உதவி, செய்தொழில் விருத்தி, நல்ல முயற்சி, போசன சுகம். |
| கடகம் | தன்னம்பிக்கை, கடின முயற்சி, பொருள் சேர்க்கை, அதிகாரம் |
| சிங்கம் | கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு, புதிய திட்டமிடல், தந்தை வழி உறவு. |
| கன்னி | வேலைச்சுமை, காரிய தாமதம், போசன சுகம், தெய்வ சிந்தை. |
| துலாம் | களஸ்திர நன்மை, பிரயாண அனுகூலம், காரியசித்தி, விருந்துபசாரம். |
| விருச்சிகம் | பகைவர் நேசம், காரிய சித்தி, உடல் நலம், தெய்வதரிசனம். |
| தனுசு | குடும்பக் கவலை, பண விரயம், முயற்சி தாமதம், போசன சுகம். |
| மகரம் | ஆரோக்கியக் குறைவு, நல்ல முயற்சி, சுபசெலவு, தெய்வ தரிசனம். |
| கும்பம் | காரிய அனுகூலம்,செல்வாக்கு, உறவினர் வருகை, வாகன சுகம். |
| மீனம் | வேலையில் ஆர்வம், முயற்சி தாமதம், தெய்வசிந்தை, தனவிரயம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 30 | 50 |
| தக்காளி | 80-120 | 140 |
| அவரை | - | - |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 |
| கோவா | 10 | 20 |
| கரட் | 40 | 50 |
| பூசணி | 15 | 30 |
| புடோல் | 40 | 50 |
| வாழைக்காய் | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 20 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 120 | 130 |
| பாகற்காய் | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 |
| கரணைக் கிழங்கு | 40 | 30 |
| ப்யிற்றங்காய் | 20 | 40 |
| லீக்ஸ் | 150 | 140 |
| போஞ்சி | - | - |
| கீரை - 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 |

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு ஸ்ரீ வட பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் மே மாதம் 2ஆம் திகதி மாலை 6 மணிக்கு கைலாசவாகனமும், 6 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறமும், 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இரதோற்சவமும் நடைபெறவுள்ளது.


ஏனைய நாட்களில் தினமும் காலை 8 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் திருவிழா ஆரம்பமாகும். (ஓ-6)

# சிங்களமொழி பயிற்சிநெறி இடம் மாற்றப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்விப் பிரிவினரால் யாழ். அத்தியார் இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்டு வந்த சிங்களமொழிப் பயிற்சிநெறி நேற்று முதல் யாழ்.நீர்வேலி றோ.க.த.க. பாடசாலைக்கு இடம்மாற்றப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

இப் பயிற்சி நெறிகள் யாவும் பிற்பகல் 3 ணியிலிருந்து 6 மணிவரை நடைபெற்று வருகிறது. (ஓ-7)




## யாழ்.செய்திகள்

# 'ஜீவநதி' சஞ்சிகை வெளியீடு

"ஜீவநதி" கலை இலக்கிய சஞ்சிகையின் இரண்டாம் ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் கலாபூஷணம் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வாழ்த்துரைகளை தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், மருத்துவர் வே.கமலநாதன், தேவரையாளி இந்துக் கல்லூரி அதிபர் மா.நவநீதமணி ,கொற்றை பி.கிருஷ்ணானந்தன் ஆகியோரும் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணாவும் மதிப்பீட்டுரைகளை விரிவுரையாளர்களான ஈ.குமரன்,த.அஜந்தகுமார், உதவிக் கல்விப் பணிப்பாளர், மு.இராசநாய்கம் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை "கருமத்திருதி" மருத்துவர் வை.தியாகராஜா பெற்றுக்கொள்வார். தொடர்ந்து ஜீவநதி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கலாமணி பரணீதரன் ஏற்புரை வழங்குவார்.

நிகழ்வின் நிறைவில் கே.ஆர்.கமலநாதன் தயாரிப்பில் கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தினர் வழங்கும் "வானத்து இராசாவே" என்ற சிறுவர் நாடகம் இடம் பெறும். (ஓ)

# விழிப்புணர்வுக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

புவி தினத்தை முன்னிட்டு ZOA நிறுவனத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகம் நடத்தும் விழிப்புணர்வுக் கண்காட்சி எதிர்வரும் 27 ஆம்திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கருணாலயம் சிறுவர் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு நல்லூர் பதில் பிரதேச செயலர், திருமதி ரூ.வரதலிங்கம் பிரதம விருந்தினராகவும், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.இரவீந்திரசர்மா, ZOA நிறுவன திட்ட இணைப்பாளர் வி.எஸ்.செந்தூரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக் கண்காட்சியில் சுற்றாடல், இயற்கை மூலிகை, கழிவு முகாமைத்துவம் போன்றவை காட்சிப்படுத்தப்பட உள்ளதனால் பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-30)

# தேசிய அடையாள அட்டைக்கு இதுவரை விண்ணப்பிக்காதோருக்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய அடையாள அட்டையின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, 16 வயது பூர்த்தியடைந்த அனைவரும் தேசிய அடையாள அட்டை கட்டாயம் வைத்திருக்க வேண்டியுள்ளதால் யாழ்.மாவட்டத்தில் இதுவரை தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதோர் விபரங்கள் பிரதேச செயலர் ரீதியாக திரட்டப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் மாவட்டத்தில் மே 2008 இல் 35 ஆயிரத்து 586 பேரும், ஒக்டோபர் 2008 இல் 14ஆயிரத்து 549 பேரும், டிசம்பர் 2008 இல் 11ஆயிரத்து 991 பேரும், பெப்ரவரி 2009 இல் 9 ஆயிரத்து761 பேரும் விண்ணப்பிக்காதிருந்தமை அறிய வந்துள்ளது.

பெப்ரவரி 2009 வரை விண்ணப்பிக்காத 9 ஆயிரத்து761 பேரின் பிரதேச செயலர் ரீதியான விபரம் வருமாறு,

யாழ்ப்பாணம் -565, நல்லூர்-239, கோப்பாய் -2ஆயிரத்து 280, கரவெட்டி-555, பருத்தித்துறை-55, சண்டிலிப்பாய்-ஆயிரத்து 274, சங்கானை-447, உடுவில் -2ஆயிரத்து 100, தெல்லிப்பளை -ஆயிரத்து 12, வேலணை-266, சாவகச்சேரி -331, காரைநகர்-112, மருதங்கேணி -02, நெடுந்தீவு-211, ஊர்காவற்றுறை-232

இவர்கள் அனைவரும் மிகவிரைவில் தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரிகளுடன் உரிய கிராம அலுவலர்களும் பிரதேச செயலர்களும் கூடிய கவனம் செலுத்துமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

# யாழ். பாடசாலைகளை 4 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளை எதிர் வரும் 4 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்று வரும் யுத்த நடவடிக்கை காரணமாக பாதுகாப்புத் தேடிவரும் பொது மக்கள் அழைத்து வரப்பட்டு அவர்கள் பாடசாலைகளில் தங்க வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்காக பாடசாலைகளை 4 ஆம் திகதி ஆரம்பிக்குமாறு கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான அனுமதியை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

# கல்வி விழிப்புணர்வு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் பாடசாலை செல்லாத பிள்ளைகளையும், பாடசாலை சென்று இடைவிலகிய மாணவர்களையும் இனங்கண்டு கல்வி வழங்குவதற்கும், பாடசாலைக்கு வரவு ஒழுங்கீனமான மாணவர்களின் வரவை சீராக்கம் செய்வதற்கும் , கட்டாயக் கல்வி, வளர்ந்தோர் கல்வி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பான கல்விச் செயலமர்வு நாளை சனிக்கிழமை சுழிபுரம் பெரியபுலோ அண்ணா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் சங்கானை பிரதேச செயலர் திருமதி தேவந்தினிபாபு , பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், செயற்திட்ட அலுவலர் ந.சண்முகராஜா, சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலய அதிபர் சி.சிவகணேசசுந்தரன், கிராம அலுவலர் ஆர்.சிறிறஞ்சன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (ஓ)

# தூய யூதா ததேயு யாத்திரைத் தலத் திருவிழா

(அரியாலை)

அரியாலை தூய யூதா ததேயு யாத்திரைத் தலத் திருவிழா நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இத் திருவிழாவிற்கான இறுதி ஆயத்த நாளாகிய நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு செபமாலையுடன் நற்கருணை வழிபாடு ஆரம்பமாகும்.

திருநாட் திருப்பலி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ஓ)

# அதிபர்களுக்கான அவசர கூட்டம்

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட அதிபர்களுக்கான அவசரக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் குடியுரிமைக் கல்வியை தரம் 10,11 வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 4 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் அனைவரும் தவறாது பங்குபற்றுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேடடுக்கொள்கின்றார். (ஓ)

■ ■ ■

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிக்கு பொறுப்பான ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-7)

# கருத்தரங்கும் விருது வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண இலங்கை சாரணர் சங்கத்தின் ஆரம்பத்திற்கான உரித்தாளர்கள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.45 மணிமுதல் மாலை 2.30 மணி வரையும், முதியோர் சாரணர் விருது வழங்கும் நிகழ்வு பிற்பகல் 1.30 மணி முதல் 2.30 மணி வரையும் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அதிபர், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வடமாகாண சாரணிய ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-6)

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை மரியன்னை பாலர் பாடசாலையிலும் பிற்பகல் 1.30 மணிமுதல் 3.30 மணிவரை சென்.செபஸ்ரியன் சனசமூக நிலையத்திலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பதைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கும் மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளும் வண்ணம் யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ஓ-6)





இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் நடைபெற்ற புதுவருட ஆரம்பநாள் நிகழ்வில் ஆயுள் கிளை விற்பனை முகாமையாளர் எ.ரஞ்சித் மங்கள விளக்கேற்றுவதையும், நிர்வாக உத்தியோகத்தர் அ.சுபேசன், சந்தைப்படுத்தல் முகாமையாளர் ப.சத்தியன் ஆகியோர் அருகில் நிற்பதையும், யாழ்.பிராந்திய முகாமையாளர் திருமதி R.F.அரியநாயகம் புதுவருட வாடிக்கையாளர் சேவையை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படம்:- கிருஸ்ணா)

# இலங்கையில் தமிழர் 128

## சமஸ்கிருத மயமாக்கக் கதைகள்

### அகத்தியர் கதைகள்

தென்னிந்தியாவில் நடந்த சமஸ்கிருதமயமாக்க நிகழ்ச்சிகள் தொடர்பாக எழுந்த மிகப் பழைய கதைகளுள் அகத்தியர் கதைகள் சிறப்பிடம் பெறுவன.

இக் கதைகள் இதிகாசங்களாகிய மகாபாரதத்திலும் இராமாயணத்திலும் பல புராணங்களிலும் காணப்படுகின்றன. கேரளத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ள பல கோயில்கள் அகத்தியருடன் தொடர்புள்ள பல கதைகளைத் தங்கள் வரலாற்றுடன் சேர்த்திருப்பதையும் காணலாம். இக் கதைகளின் நாயகனாக இருப்பவர் அகத்தியர் என்னும் ரிஷி ஆவார்.

பிராமண குலத்தில் பிறந்த அகத்தியர் கடக்க முடியாத விந்திய மலையைத் தணித்த பின் அதனைக் கடந்து தெற்கு நோக்கிச் சென்று குஞ்சர மலையில் தன் ஆச்சிரமத்தை நிறுவினார்.

பின்னர் தென்னாட்டு அரசாகிய விதர்ப்ப நாட்டின் மன்னன் மகளாகிய லோபாமுத்திரையை ( வேறு கதைகளின் படி இவள் காவேரனின் மகள்) மணம் முடித்துத் தென்னாட்டில் இராக்கதர்களை வென்று தன் ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.

மகாபாரதத்தில் உள்ள கதைகளின்படி இராக்கதர்களாகிய வாதாபியும் அவன் தம்பி இல்வளனும் அகத்தியருக்குத் தொல்லை கொடுத்தபோது, கடா வடிவத்தில் வந்த வாதாபியை விழுங்கி, இல்வளனைக் கொன்றொழித்து இராக்கதர் தொல்லையைத் தென்னாட்டில் அகத்தியர் நீக்கினார்.

தமிழ் மொழியின் முதலாவது இலக்கண நூலை (அகத்தியம்) எழுதியவராகவும் தென்னாட்டில் இலக்கியத்தை அறிமுகப்படுத்தியவராகவும் அகத்தியர் போற்றப்படுகின்றார்.

### பரசுராமர் கதைகள்

இக் கதைகள் கேரளத்தில் நிகழ்ந்த சமஸ்கிருத மயமாக்கத்துடன் தொடர்புடையவை. பிராமணகுலத்தில் பிறந்த பரசுராமர் (பரசு என்னும் ஆயுதத்தை உடைய இராமர்) விஷ்ணுவின் அவதாரமாகக் கருதப்படுகின்றார்.

சிவனிடமிருந்து பெற்ற பரசு ஆயுதத்தின் உதவிகொண்டு இவர் ஈட்டிய சாதனைகள் இக் கதைகளில் இடம்பெறுகின்றன. பஞ்ச பாண்டவர்களுள் ஒருவனான அர்ச்சுனனுக்குப் போர் வித்தைகளைப் பரசுராமர் கற்பித்தவர் என்று மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. பரசுராமர் க்ஷத்திரியத் தலைவர்களை எதிர்த்த ஒருவராகவும் கேரளத்தில் பிராமணர்களைக் குடியேற்றியவராகவும் கருதப்படுகின்றார்.

பிராமணர்களின் பாதுகாப்புக்காகக் கேரள நாட்டை அவர் தோற்றுவித்தார். இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கோகர்ணம் என்னும் தலத்திலிருந்து தனது பரசை எறிந்தபோது, அது கன்னியாகுமரியில் வந்து வீழ்ந்தது. கோகர்ணத்துக்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட கடல் அதன் விளைவாக நிலமாக மாறியது. அந்நிலத்தைப் பரசுராமர் பிராமணருக்கு வழங்கினார்.

### அர்ச்சுனன் கதைகள்

மகாபாரதப் போரின் வீரர்களாகிய பஞ்ச பாண்டவர்களுள் மூன்றாவது சகோதரனான அர்ச்சுனன் தென்னாட்டில் நடந்த சமஸ்கிருத மயமாக்கத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளான். வில்வித்தையில் திறமை பெற்றிருந்த அர்ச்சுனன் ஒரு தலைசிறந்த போர்வீரன். இந்தியாவின் பல்வேறு பாகங்களில் அவனது செயல்கள் பற்றிய கதைகள் இருக்கின்றன.

பன்னிரண்டு ஆண்டுகள் நாடு கடத்தப்பட்டு வாழ்ந்த காலத்தில் அவன் பல் வகைப்பட்ட பின் தங்கிய மக்களுடன் போராடிய கதைகள் இவற்றுள் அடங்கும். இப்படியான போராட்டங்களுள் ஒன்று நீசீடர் என் போருடன் நடத்திய போர். அவன் இவ்வாறு சென்ற இடங்களுள் ஒன்று நாகர் வாழ்ந்த இடம்.

அங்கு அவன் நாககன்னிகை ஒருத்தியை (உலுபி) மணந்து வாழ்ந்தபோது அவளுக்கு ஒரு மகன் பிறந்தான். இப்படிப் பல கதைகள் தென்னாட்டு மக்கள் மீது அர்ச்சுனன் ஆதிக்கம் செலுத்தியது தொடர்பாக எழுந்தன.

### விஜயன் கதைகள்

விஜயன் கதைகள் இலங்கையில் நடந்த சமஸ்கிருத மயமாக்கம் பற்றியவை. இக் கதைகள் இலங்கையின் பாளி, சிங்கள வரலாற்றேடுகளில் மட்டுமல்லாது இந்திய நூல்கள் சிலவற்றிலும் சீன நூல்கள் சிலவற்றிலும் காணப்படுகின்றன. இலங்கைத் தமிழர் மரபுக் கதைகளில் ஒரு திரிந்த வடிவத்தில் இக் கதை காணப்படுகின்றது.

இந்தியாவில் வங்கதேசத்தின் இளவரசனான விஜயன் தன்னுடைய தோழர்களுடன் கூடி நாட்டில் ஏற்கமுடியாத செயல்களில் ஈடுபட்டதனால் அவன் தந்தை விஜயனையும் தோழர்களையும் நாடு கடத்தி, ஒரு கப்பலில் ஏற்றிவைத்தான்.

இக் கப்பல் இலங்கையை வந்தடைந்தது. இலங்கையில் அப்பொழுது இயக்கர் (பேய்கள்) என்போர் வாழ்ந்தனர். இயக்கப் பெண் ஒருத்தி (இயக்கினி) அங்கு வருவோரைத் தந்திரமாகக் கைப்பற்றிச் சிறைப்படுத்துவது வழக்கம். அவள் பெயர் குவண்ணா (குவேனி என்றும் சொல்லப்படும்).

விஜயனின் தோழர்களை ஒருவர் பின் ஒருவராகத் தன் மந்திர நடவடிக்கையால் குவண்ணா சிறைப்படுத்திய பின், விஜயன் அவளை எதிர்த்து வெற்றிகொண்டு, தோழர்களை விடுவித்து, குவண்ணாவின் உதவியுடன் பிற இயக்கர்களையும் வெற்றி கொண்டு நாட்டின் மன்னனாகப் பதவிபெற்றான். இவன் முதலில் குவண்ணாவை மணம்முடித்து வாழ்ந்தபோது, ஒரு மகனும் ஒரு மகளும் இவர்களுக்குப் பிறந்தனர்.

பின்னர் விஜயன் இவர்களையும் குவண்ணாவையும் துரத்திவிட்டுப் பாண்டிய இளவரசி ஒருத்தியை மணம் முடித்து முறைப்படி முடி சூட்டு விழா நடத்தி இலங்கையின் முதல் மன்னனாக ஆண்டான்.

### கௌண்டின்யர் கதைகள்

தென்கிழக்காசியாவில் தோன்றிய பல அரசுகளுடைய தோற்ற வரலாறும் அங்கு நடந்த சமஸ்கிருதமயமாக்கமும் கௌண்டின்யர் என்ற ஒரு பிராமணத் தலைவர் பற்றிய கதைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. இக் கதைகள் தென்கிழக்காசியாவில், சிறப்பாகக் கம்போடியாவில், சம்பா மற்றும் அங்கோர் போன்ற இடங்களிலும், அப்பால் மலேஷியாவில் கெடா போன்ற இடங்களிலும் தோன்றிய அரசுகளுக்குப் பொதுவானவை.

பேராசிரியர்
கா. இந்திரபாலா

இவற்றைவிட வேறு சமஸ்கிருத மயமாக்கக் கதைகளும் அங்கு வழங்குகின்றன. இக் கதைகள் சீன நூல்களிலும் பழைய கம்போடியக் கல்வெட்டுக்களிலும் பேணப்பட்டுள்ளன.

கௌண்டின்யர் என்ற ஒரு பிராமணர் வலிமை மிகுந்த ஒரு வில்லை ஆயுதமாகப் பெற்றுத் தென்கிழக்கு ஆசியாவுக்குச் சென்றபோது, அங்கு ஸோமா என்ற நாக கன்னிகை ஒருத்தியின் எதிர்ப்பைப் பெற்றார். தனது வில்லின் வலிமையால் அவளைத் தோற்கடித்து, அவர் அவளை மணம்புரிந்து புனான் என்னும் அரசை நிறுவி அதன் மன்னனாக ஆட்சி நடத்தினார். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 46



எதிலும் மாற்றம் வேண்டும். வெள்ளை மாளிகையில் மாற்றம் வேண்டும். அங்கே தான் ரீகனும் அவருடைய அடியாட்களும் தவறுகள் பலவற்றைத் தொடர்ந்து இழைத்துக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸில் மாற்றம் வேண்டும். ஏன்? அது ஊழல் நிறைந்தது. அங்கு எதற்கும் ஆமாப்போடும் ஒரு கூட்டத்தினர். எமது நாட்டின் மன நிலையில் மாற்றம் ஏற்படவேண்டும். காரணம் அது பதட்டம் நிறைந்த குழப்பத்தில் தத்தளிக்கிறது. ஆனால் மாற்றம் மேலிடத்திலிருந்து வரப்போவதில்லை. அடிமட்டத்திலிருந்து கூட்டு முயற்சியாக விரைவுபடுத்தப்பட வேண்டும். இப்படித்தான் தனது 'மாற்றம்' என்ற மந்திர உச்சாடனத்திற்கு விளக்கம் தந்தார்.

சரி. எப்படி இதை சாதிக்கப் போகிறார்? இலட்சியவாதியான இந்த இளம் கல்லூரி மாணவன் தனது திட்டத்தை வெளியிட்டார். கறுப்பின மக்களை ஒன்றுதிரட்டி சமூக மாற்றத்தைக் கொண்டு வர அடிமட்டத்திலிருந்து ஆரம்பிப்பாராம். கல்லூரியிலிருந்து பட்டதாரியாக வெளியேறும் காலம் நெருங் கிவிட்டது ஏதாவது சாதிக்கவேண்டும். தன் செயல் திறனைப் பயன்படுத்த வேண்டும் என்ற துடிப்பு உத்வேகம்.

தான் படித்த நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட சுலோகங்களை மேற்கோள்காட்டி தன்னுணர்வுக்கு ஓவியம் தீட்டி நிரூபணம் செய்ய முற்பட்டார். ஆனால் அந்த முயற்சியும் அவருக்கு மனத்திருப்தியைத் தராது போகவே அதைக் கைவிட்டார்.

கடந்த காலங்களில் நிகழ்ந்த குடியுரிமை இயக்கங்களின் செயற்பாடுகள் அவரின் கண்முன் காட்சிகளாக விரிந்தன. அவை அவருக்கு பிரார்த்தனையாக அமைந்தன. தளரும் ஆத்ம சக்தியை மீட்டெடுத்தன. உணர்ச்சிகளுக்கு வாய்க்கால் அமைத்தன. இந்தப் போராட்டத்தில் தான் தனி மனிதன் அல்லன் என்றுணர்ந்தார். கறுப்பர்கள் என்றுமே தனி இனக்குழுவாக இந்த நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டதில்லை.

ஆகவே இனங்களாக தனிச் சமூகமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அதற்காகப் போராட வேண்டும். தோட்டப் பயிர்களை போல நன்கு பராமரிக்க வேண்டும். மனிதர்களின் கனவுகளுக்கு ஏற்ப சமூகங்கள் விரிவடைந்தன அல்லது குறுகின. குடியுரிமை இயக்கத்தில் இந்த கனவுகள் மிகப் பெரிதாக இருந்தன. அங்கே ஆபிரிக்க - அமெரிக்கச் சமுதாயம் என்பது அங்கத்துவத்தாலும் தியாகத்தாலும் அமைப்புக்கு உட்படுவதாலும் உருவாக்கம் பெற்றது.

அங்கத்துவம் இலகுவாகக் கிடைக்கவில்லை. பாடுபட்டு உழைத்துப்பெற்றது. ஒபாமாவைப் பொறுத்தளவில் இந்த சமூக அமைப்பு இன்னும் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. காலக்கிரமத்தில் பெரிய அமெரிக்க சமூகமாக கறுப்பு, வெள்ளை மண்ணிறம் என்று எல்லோரையும் ஒருங்கே தனகத்தே கொண்ட பாரிய சமுதாயமாக மிளிரப் போகிறது. புத்தாக்கம் பெற்று தன்னை மீட்டெடுக்கப் போகிறது.

அப்போது அது தன்னுடைய தனித்துவத்தை ஏற்றுக் கொள் ளும் என்று ஒபாமா நம்பினார். இது தான் ஒபாமா கண்ட அமைப்பு. அதுவே விமோச னத்துக்கான வழி.

ஒபாமாவின் படிப்பு முடிய இன்னும் சில மாதங்களே இருந்தன. குடியுரிமை நிறுவனங்கள், கறுப்பினத் தலைவர்கள், அயலிலுள்ள நகர பட்டின சபைகள் என்று பலருக்கும் கடிதங்கள் எழுதினார். யாரும் பதில் எழுதவில்லை. அதற் காக அவர் மனம் சோர்ந்து போகவில்லை. ஆகவே வேலை தேடி ஒரு வருடமாவது உழைக்க வேண்டும் என்று தீர்மானித்தார். அவர் மாணவர் கடன் திட்டத்தின் கீழ் பணம் பெற்றுத்தான் படித்தார். இப்போது அதை மீளளிக்கவேண்டும். அதற்காக உழைக்க எண்ணினார். தன் இலட்சியத்தை அடை யவும் பணம் வேண்டும். அதற்காக கொஞ்சம் சேமிக்கவும் விரும்பினார். அமைப்பாளர்கள் காசு சம்பாதித்ததில்லை. அவர்களின் பஞ்சம் அவர்களின் உறுதிக்கும் நேர்மைக்கும் சான்றுகளாக விளங்கின.

### ஜம்பொன்

கடைசியாக பன்னாட்டு நிறுவனங்களுக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்கும் நிறுவனமொன்றில் ஆய்வு உதவியாளராக பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்தது. அதன் அலுவலகம் நியூயோர்க்கிப் பிரதான பகுதியான மன்ஹற்றனில் அமைந்திருந்தது. (தொடரும்)

# இடம் பெயர்ந்த மக்களைத் தங்கவைக்க மேலும் 5 முகாம்கள் அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

பாதுகாப்பு வலயத்திலிருந்து தப்பி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை நாடி வருவோரைத் தங்க வைக்க மேலதிகமாக 5 நலன்புரி முகாம்களை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வவுனியா மாவட்டத்திலுள்ள தாண்டிக்குளம் வித்தியாலயம், விபுலானந்த வித்தியாலயம், முள்ளியகுளம் வித்தியாலயம், வீரபுரம் வித்தியாலயம், ஆண்டிக்குளம் வித்தியாலயம் மற்றும் கட்டப்பம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே இந்த நலன்புரி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களைத் தங்க வைப்பதற்காக வவுனியா மாவட்டத்தில் ஏற்கனவே இயங்கி வருகின்ற 15 நலன்புரி நிலையங்களுக்கு மேலதிகமாகவே இந்த 5 நலன்புரி நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன என்றும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஓ-6)

# வவுனியா வந்துள்ள மக்களுக்கு உதவி வழங்குமாறு வேண்டுகோள்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு கடந்த சில தினங்களில் பெரும் எண்ணிக்கையில் வந்துள்ள மக்களுக்கு உதவி வழங்குமாறு கிராம மட்டத்திலான அமைப்புக்களிடம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என். சிவசக்தி ஆனந்தன் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சுமார் ஒரு இலட்சம் மக்கள் ஒரே நேரத்தில் கடந்த ஒரு சில தினங்களில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்துள்ள நிலையில் அவர்களுக்கான சமைத்த உணவை மாவட்டச் செயலகத்தினால் மட்டும் சரியான முறையில் போதிய அளவில் வழங்குவது சாத்தியமற்றது.

எனவே கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், சமய நிறுவனங்கள் மற்றும் பொது நிறுவனங்களும் தம்மால் முடிந்த அளவு சமைத்த உணவை மாவட்டச் செயலகத்தின் ஊடாக வழங்க முன்வர வேண்டும் என அவர் தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான மாற்றுடைகள், உள்ளாடைகள் மற்றும் பெண்களின் சுகாதாரத் தேவைகளுக்கு அவசியமான பொருட்கள் என்பவற்றையும் வழங்குவதற்குப் பொது மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள எழுத்து மூலமான இந்த அவசர வேண்டுகோளில் வவுனியா பொது மருத்துவமனையில் பெரும் எண்ணிக்கையில் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களுக்கு நாளொன்றிற்கு 20 பைந்து இரத்தம் தேவைப்படுவதாகவும், எனவே இளைஞர்கள், மாணவர்கள் சமூக ஆர்வலர்கள் சுழற்சி முறையில் இரத்ததானம் செய்ய முன்வர வேண்டும் என்றும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என். சிவசக்தி ஆனந்தன் கோரியுள்ளார். (ஓ-6)

## ஜேர்மனியில்

# கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதியையடுத்து போராட்டம் முடிவடைந்தது

(டுசல்டோவ்)

உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று அரசியற் கட்சியினர் வாக்குறிதியை அளித்ததினால் ஜேர்மனி டுசல்டோவ் மாநில நாடாளுமன்றத்தின் முன்பாகக் கடந்த 8 நாட்களாக நடைபெற்று வந்த கவனயீர்ப்பு உண்ணா நிலைப் போராட்டம் முடிபுக்கு வந்துள்ளது.

டுசல்டோவ் மாநில நாடாளுமன்றத்தின் முன்பாகக் கடந்த 8 நாட்களாக நடைபெற்று வந்த கவனயீர்ப்பு உண்ணா நிலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களுடன் நேற்று முன்தினம் மாலை ஜேர்மனியின் முக்கிய கட்சிப் பிரமுகர்கள் நடத்திய பேச்சுகளை அடுத்து உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்ற அரசியற் கட்சியினர் வாக்குறுதியை அளித்ததுடன் உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடும்படியும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை அடுத்து உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தமது போராட்டத்தை முடிவிற்குக் கொண்டு வந்தனர். இவ் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தமிழ் மருத்துவர் செல்வி பிரசாந்தி லோகேஸ்வரன் பழச்சாறு கொடுத்து முடித்து வைத்தார்.

இப்போராட்டங்களின் தொடர்ச்சியாக இன்று வெள்ளிக்கிழமை பேர்லினில் உள்ள வெளிநாட்டு அமைச்சுக்கு முன்பாக மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. (ஓ-6)

# சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளை இருதரப்பினரும் செவிமடுக்க வேண்டும்

## நியூசிலாந்து அரசாங்கம் வலியுறுத்தல்

வன்னிப் பெருநிலப் பரப்பில் சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு யுத்த முன்நகர்வுகள் நிறுத்தப்பட வேண்டுமென நியூசிலாந்து அரசாங்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அப்பாவிப் பொதுமக்கள் எதிர்நோக்கி வரும் பேரவலத்தை தடுத்து நிறுத்த அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளுக்கு செவிமடுக்க வேண்டும் என்று நியூசிலாந்து வெளி விவகார அமைச்சர் மரே மெக்யூலி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வலயத்தில் சிக்கியுள்ள அப்பாவிப் பொதுமக்களின் நிலைமை குறித்து நியூசிலாந்து அதிக கவலை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் சுதந்திரமாக இடம் நகரவும், அவர்களுக்கு தேவையான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் அனுமதியளிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததெனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஊடக அமைப்புக்கள் யுத்த வலயத்திற்கு சுதந்திரமாக செல்ல அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# ஐரோப்பிய ஒன்றியத்தின் விசாரணைக்குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மாட்டோம்

## ரோகித போகொல்லாகம தெரிவிப்பு

(கொழும்பு)

ஜி. எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நீடிப்பு தொடர்பில் இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் விசாரணைகளை நடத்துவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என இலங்கையின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நீடிப்பதற்கான நிபந்தனைகளாக இலங்கையில் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் திட்டமிட்டுள்ளது. இந்த வரிச்சலுகை நீடிப்பு தொடர்பாக இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சுக்களை மட்டுமே நடத்தும் விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க மாட்டோம் என தெரிவித்தார். (ஓ-6)

## சட்டவிரோதமாக

# படகுமூலம் அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 22 தமிழர்கள் நீர்கொழும்பில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நீர் கொழும்பு கடற்கரையிலிருந்து படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முயன்ற 22 பேரை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக அவுஸ்திரேலியாவிற்கு செல்ல ஒருவரிடம் தலா ஐந்து லட்சம் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

காவற்துறை உயரதிகாரிகள் சிலரின் ஒத்துழைப்புடன் இந்த சட்டவிரோத ஆட்கடத்தல் சம்பவம் இடம்பெற்று வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சட்டவிரோத ஆட்கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் தொடர்பில் விசாரணை நடத்த இரண்டு விசேட காவற்துறை குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலைப் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் காவற்துறையினர் கூறியுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தடுப்பு காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக காவற்துறை அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அரசியல் தஞ்சம் கோரியும், தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்கும் சட்டவிரோத குடியேற்றக்காரர்களின் எண்ணிக்கை உயர் வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத குடியேற்றக்காரர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (ஓ-6)

# இடம்பெயர்ந்த மக்களுக்கான சுகாதார சேவைகள்

(கொழும்பு)

கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலிருந்து வருகை தரும் பொதுமக்களில் காயமடைந்தவர்களுக்கு விசேட சுகாதார சேவைகளை வழங்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் சிறுவர்களின் போசாக்குத் தன்மையை அதிகரிக்கவும் தொற்றுநோய் பரவுவதைத் தடுக்கவும் முடியும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தவிர தற்போது இடம்பெயர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் நலன்கருதி வைத்தியசாலைகளுக்கு கட்டில்கள் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## 4 ஆவது முறையாக

# தென்னாபிரிக்காவில் ஆளும் கட்சி மீண்டும் ஆட்சியை கைப்பற்றுகிறது

(ஜோகன்ஸ்பர்க்)

தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது. காலை 7 மணிக்கு தேர்தல் தொடங்கியது. இரவு 9 மணிக்கு ஓட்டுப்பதிவு முடிந்தது. ஓட்டு எண்ணிக்கை உடனடியாக தொடங்கியது. 2 கோடியே 30 இலட்சம் வாக்காளர்கள் ஓட்டுப் போட தகுதி பெற்றவர்கள் ஆவார்கள்.

வெள்ளையர் ஆட்சி தோற்கடிக்கப்பட்ட 1994 ஆம் ஆண்டு முதல் நடந்த 3 தேர்தல்களிலும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது.

இப்போது 4 ஆவது முறையாக நடக்கும் தேர்தலிலும் ஆளும் கட்சியே வெற்றி பெறும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இந்த முறை முன்பை விட எதிர்க்கட்சிகளிடம் இருந்து கடுமையான சவால் எழுந்து உள்ளது.

ஊழல், வறுமை, குற்றச் செயல்களின் பெருக்கம் ஆகியவை காரணமாக மக்கள் விரக்தி அடைந்து உள்ளனர் என்பது தான் ஆளும் கட்சிக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டு ஆகும். ஆளும் கட்சி வெற்றி பெற்றால் அதன் தலைவர் ஜூமா ஆட்சி அமைப்பார். (ஓ-6)

# பூமியை விட இருமடங்கு பெரிதான கோள் கண்டுபிடிப்பு

பூமியை விட இரு மடங்கு பெரிதான புதிய கோள் ஒன்றை சூரிய மண்டலத்துக்கு வெளியே விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். அதி பிரகாசமான கோளொன்றை கண்டு பிடித்துள்ளதாக சிலி விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். இதுவரை கண்டறியப்பட்ட கோள்களிலேயே மிகவும் பிரகாசமான இக்கோள் துலா நட்சத்திரத் தொகுதியில் அமைந்துள்ளது.

கிளியஸ் 581 நட்சத்திர சுற்றுவட்டப்பாதையில் அமைந்துள்ள இக்கோளானது பூமியை விட சுமார் இரு மடங்கு பெரிதாகும். சிலியின் லா சில்லாவிலுள்ள 3.6 மீற்றர் நீளமான தொலைநோக்கி மூலமே இந்தக் கோள் அவதானிக்கப்பட்டுள்ளது.

சூரிய மண்டலத்துக்கு வெளியே இதுவரை கண்டறியப்பட்ட கோள்களிலேயே மிகவும் சிறிய கோள் இதுவென சுவிற்ஸர்லாந்திலுள்ள ஜெனீவா விண்வெளி அவதான நிலையத்தைச் சேர்ந்த மைக்கல் மேயர் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்தும்

# கௌரவிப்பு விழா -26.04.2009

## கௌரவம் பெறும் யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை க.பொ.த(உ/த) 2008 மாணவர்களின் பெயர் விபரம்

### யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | பி.நிரோஷன் | கணிதம் | 3A |
| 2 | எஸ்.யாதவன் | கணிதம் | 3A |
| 3 | ஏ.அல்பேட் நிமலன் | உயிரியல் | 3A |
| 4 | ஜி.யதுர்ஷன் | கணிதம் | 3A |
| 5 | கே.கரிகாலன் | கணிதம் | 3A |
| 6 | எம்.பார்த்தீபன் | கணிதம் | 2A,B |
| 7 | எஸ்.ரகுராஜ் | உயிரியல் | 3A |
| 8 | என். மனோஜ் | கணிதம் | 3A |
| 9 | ரி.ஜெயக்கிருஷ்ணன் | கணிதம் | 2A,B |
| 10 | வி.ஜெய்ராஜ் | உயிரியல் | 2A,B |
| 11 | எஸ்.மோகனராஜ் | கணிதம் | 2A,B |
| 12 | கே.சுபாஷ்கர் | கணிதம் | 3A |
| 13 | ஜே.திபாகர் | கணிதம் | 2A,B |
| 14 | எம்.பிருந்தாபன் | கணிதம் | 2A,B |
| 15 | பி.ராஜ்குமார் | கணிதம் | 2A,B |
| 16 | எஸ்.விசாகன் | உயிரியல் | 3A |
| 17 | கே.யாதவராஜ் | கணிதம் | 2A,B |
| 18 | எஸ்.நிரஞ்சனன் | கணிதம் | 2A,B |
| 19 | கே.ஜெயமோகன் | கணிதம் | 2A,B |
| 20 | எஸ்.செந்தில்குமரன் | கணிதம் | 2A,B |
| 21 | என்.கௌசிகன் | உயிரியல் | 2A,B |
| 22 | எல்.சுஜீபன் | கணிதம் | 2A,B |
| 23 | வி.சிவமைந்தன் | உயிரியல் | 2A,B |
| 24 | எஸ்.விக்னன் | உயிரியல் | 2A,B |
| 25 | எ.கிருத்திகன் | உயிரியல் | 2A,B |
| 26 | யு.தமோனுதன் | வர்த்தகம் | 3A |
| 27 | எஸ்.நிஷாந்தன் | உயிரியல் | 2A,B |
| 28 | ரி.பிரதீபன் | கலை | 2A,B. |
| 29 | ஜி.ஜனார்த்தனன் | கலை | 2A,B |
| 30 | வி.பத்மநாபா | கலை | 2A,B |
| 31 | வி.பிரகாஷ் | கலை | 2A,B |
| 32 | எஸ்.விஸ்ணுராஜ் | கலை | 2A,B |
| 33 | ஏ.கரீந்திரன் | உயிரியல் | 3A |
| 34 | ஈ.கஜேந்திரநாதன் | உயிரியல் | 3A |
| 35 | ரி.வினோபன் | உயிரியல் | 2A,B |

### திருக்குடும்ப கன்னியர்மடம் ம.வித்தி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | வை.பபிதா | வர்த்தகம் | 2A,B |
| 2 | ஏ.ஜெயதர்சினி | கலை | 3A |
| 3 | ஜெ.டில்றுக்ஷி | கலை | 3A |
| 4 | எல்.யூட்நிரோஜா | கலை | 3A |
| 5 | ஈ.நிரோசியா | கலை | 3A |
| 6 | அமல்காயத்திஅனோஜா | கலை | 3A |
| 7 | ரி.அனுஜிக்கா | கலை | 2A,B |
| 8 | ஏ.டானியா டுக்ஷி | கலை | 3A |
| 9 | ஜெ.சர்மிளா | கலை | 2A,B |
| 10 | ஏ.அனிற்றா அஜந்தி | கலை | 2A,B |
| 11 | எஸ்.ரெஜிவேர்னியா | கலை | 2A,B |
| 12 | கே.தண்சிகா | கலை | 2A,B |
| 13 | கே.மேரிஜெயபாலினி | கலை | 2A,B |
| 14 | ஜே.நேகா ஜக்குலின் | கலை | 2A,B |
| 15 | ஜே.சிந்துஜா | கலை | 2A,B |
| 16 | எஸ்.ஜான்சி | கலை | 2A,B |
| 17 | என்.சௌமியா | கலை | 2A,B |

### சென்.ஜோன்ஸ் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | வி.கௌதமன் | கலை | 3A |
| 2 | கே.கிருஷ்ணானந்தன் | கணிதம் | 2A,B |
| 3 | வி.சயந்தன் | வர்த்தகம் | 3A |
| 4 | எஸ்.கோபிநாத் | கணிதம் | 2A,B |
| 5 | கே.சுஜந்தன் | வர்த்தகம் | 3A |
| 6 | எம்.நோவாபிரதீப் | வர்த்தகம் | 3A |
| 7 | எஸ்.ஸ்ரீவாகீசன் | கலை | 3A |
| 8 | எஸ்.ஜொய்தாருக்ஷன் | வர்த்தகம் | 2A,B |
| 9 | எஸ்.முரளிகிருஷ்ணா | கலை | 2A,B |
| 10 | எஸ்.கஜானந்த் | கலை | 2A,B |

### செங்குந்தா இந்துக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | பி.ரசிதா | கலை | 3A |
| 2 | எஸ்.சுதர்ஷனா | கலை | 3A |

### வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | பி.ஜனனி | உயிரில் | 2A,B |
| 2 | எஸ்.தேவகி | கணிதம் | 2A,B |
| 3 | ஜி.குயிந்தினி | கலை | 3A |
| 4 | கே.நிரோஷி | உயிரியல் | 2A,B |
| 5 | வி.காருண்ஜா | உயிரியல் | 2A,B |
| 6 | என்.கஜனி | உயிரியல் | 2A,B |
| 7 | ஆர்.மேனுகா | வர்த்தகம் | 3A |
| 8 | கே.கமலாஜினி | கலை | 3A |
| 9 | கே.திவ்வியவர்த்தனி | கலை | 2A,B |
| 10 | எஸ்.தவரூபிகா | கலை | 2A,B |
| 11 | ஜே.சாளினி | கலை | 3A |
| 12 | ரி.அர்ச்சுதா | வர்த்ககம் | 3A |
| 13 | எஸ்.யாழினி | கலை | 3A |
| 14 | கே.பானதி | வர்த்தகம் | 3A |
| 15 | கே.ராஜி | வர்த்தகம் | 2A,B |
| 16 | ஜே.மலர்மதி | வர்த்தகம் | 2A,B |
| 17 | கே.கேமாலினி | கலை | 2A,B |
| 18 | ஜி.மானிகா | கலை | 2A,B |
| 19 | கே.துஷிதா | கலை | 3A |
| 20 | எஸ்.கபிலா | கலை | 2A,B |
| 21 | வி.சுவேதா | கலை | 2A,B |
| 22 | ஆர்.பிரியதர்ஷினி | கலை | 3A |
| 23 | எஸ்.கார்த்திகா | கலை | 2A,B |
| 24 | பி.நிரோஜினி | வர்த்தகம் | 2A,B |
| 25 | ரி.புவனா | கலை | 2A,B |
| 26 | கே.சிவை | கலை | 3A |
| 27 | வி.மதிவதனி | கலை | 2A,B |
| 28 | வி.நவவித்தியா | கலை | 2A,B |
| 29 | கே.தயாநிதி | கலை | 2A,B |
| 30 | கே.பிரியதர்ஷினி | கலை | 3A |
| 31 | எம்.தர்ஷிகா | கலை | 2A,B |
| 32 | எஸ்.டிலக்ஷா | கலை | 2A,B |
| 33 | பி.சர்மிளா | கலை | 2A,B |

### யாழ்.மத்திய கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | கே.மிதுலன் | வர்த்தகம் | 3A |
| 2 | பி.ஜேம்ஸ்ராஜ் | கணிதம் | 2A,B |
| 3 | சி.கோபிநாத் | கலை | 3A |
| 4 | எஸ்.செல்வசுஜாந்தன் | கலை | 2A,B |
| 5 | ஜே.பானுஜன் | வர்த்தகம் | 2A,B |
| 6 | பி.அகல்யன் | வர்த்தகம் | 2A,B |
| 7 | ஐ.தயாபரன் | கலை | 2A,B |
| 8 | கே.செல்றறன் | கலை | 2A,B |
| 9 | எம்.பத்மரூபன் | கலை | 2A,B |
| 10 | கே.கீர்த்தனன் | கலை | 2A,B |
| 11 | வி.கஜேந்திரகுமார் | கலை | 2A,B |

### கொக்குவில் இந்துக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | எஸ்.சாலவன் | கணிதம் | 3A |
| 2 | கே.தர்மேஸ்வரன் | கணிதம் | 2A,B |
| 3 | வி.வர்ஷிகன் | கணிதம் | 2A,B |
| 4 | என்.சிவாஸ்கர் | கணிதம் | 2A,B |
| 5 | எஸ்.சிவதர்சன் | வர்த்தகம் | 3A |
| 6 | பி.ஜனனி | வர்த்தகம் | 2A,B |
| 7 | எஸ்.லதர்சன் | வர்த்தகம் | 2A,B |

### புனித பத்திரிசியார் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | யு.தயாஸ்வரன் | உயிரியல் | A,2B |
| 2 | எஸ்.ஏ.ஜோசப் | உயிரியல் | 2A,B |
| 3 | எஸ்.நரேஷ் | வர்த்தகம் | 3A |
| 4 | எஸ்.பெனற் சிங்கர் | கலை | 3A |
| 5 | ஜே.யூட்பிரதீபன் | கலை | 2A,B |
| 6 | அன்தோனிஸ் | கலை | 3A |
| 7 | ஆர்.எவ்.றொசான் | கலை | 3A |
| 8 | ஏ.நிரோஜித் | கலை | 3A |
| 9 | எஸ்.அஜித் | கலை | 2A,B |
| 10 | கே.கபில்தாஸ் | கலை | 3A |
| 11 | எஸ்.பேர்டினற் | கலை | 3A |
| 12 | ஜி.ஜோய் ராஜ்மன் | கலை | 2A,B |
| 13 | எஸ்.அஜந்தன் | கலை | 3A |
| 14 | எக்ஸ்.ஜஸ்ரின்ராஜா | கலை | 3A |

### சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | பி.பிருந்தா | கலை | 3A |
| 2 | எஸ்.லிஜா | உயிரியல் | 3A |
| 3 | பி.சாரங்கி | வர்த்தகம் | 2A,B |
| 4 | ரி.மதுராந்தி | கலை | 2A,B |
| 5 | வி.றொசற்றா ரஜிதா | கலை | 3A |
| 6 | ரி.டயானா | கலை | 3A |
| 7 | எஸ்.குமுதா | கலை | 3A |
| 8 | வை.மார்லின் தயானா | கலை | 2A,B |
| 9 | ரி.அபிலாசா | கலை | 2A,B |
| 10 | எஸ்.ஜெசுறா | கலை | 2A,B |
| 11 | ஏ.அனுசானி | கலை | 2A,B |
| 12 | எம்.மயூரி | கலை | 2A,B |
| 13 | எம்.நிஷாந்தி | கலை | 2A,B |
| 14 | ஜெ.சோபின்ஜா | கலை | 2A,B |
| 15 | என்.குணசாந்தினி | கலை | 2A,B |
| 16 | பி.சுரேகா | கலை | 2A,B |
| 17 | எஸ்.வாசுகி | கலை | 2A,B |

### கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயம்

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | ஆர்.சசிகலா | கலை | 2A,B |
| 2 | எஸ்.சரண்ஜா | கலை | 3A |
| 3 | ரி.கலைவாணி | கலை | 2A,B |
| 4 | கே.குகப்பிரியா | கலை | 2A,B |
| 5 | எஸ்.பிருந்தா | கலை | 2A,B |
| 6 | ரி.கேமினி | கலை | 2A,B |
| 7 | வி.பிரதீபா | கலை | 2A,B |

### யாழ்.இந்து மகளிர் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | ஜெ.சைந்தவி | வர்த்தகம் | 3A |
| 2 | ஜி.தனுஜா | வர்த்தகம் | 3A |
| 3 | கே.சுகன்ஜா | கலை | 2A,B |
| 4 | ஈ.பிரசாந்தி | கலை | 3A |
| 5 | வை. இந்துஜா | கலை | 2A,B |
| 6 | ஏ.பிரியந்தினி | கலை | 2A,B |
| 7 | பி.நிரோஷா | கலை | 3A |
| 8 | சி.பிரமிளா | கலை | 3A |
| 9 | சி.சாம்பவி | கலை | 2A,B |
| 10 | வி.மயூரிகா | கலை | 2A,B |
| 11 | எஸ்.ரஜீதா | கலை | 2A,B |
| 12 | ஆர்.கேசிகா | கலை | 2A,B |
| 13 | ஆர்.துஷியா | கலை | 2A,B |
| 14 | ஈ.சிந்துஜா | கலை | 2A,B |
| 15 | எஸ்.கோபிகா | கலை | 2A,B |
| 16 | ரி.குகநிதி | கலை | 2A,B |
| 17 | வி.கஜோதா | வர்த்தகம் | 2A,B |
| 18 | வி.பிரபாஷினி | கலை | 2A,B |

### சென்ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | எஸ்.சுமலதா | கலை | 3A |
| 2 | ஜே.நிருஷா | கலை | 3A |
| 3 | ஏ.அருள்சீவி | கலை | 2A,B |

### அச்சுவேலி மத்திய கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | சி.மேரிதர்மினி | கலை | 3A |

### வைத்தீஸ்வராக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | சி.றுகுணாஸ் | கலை | 2A,B |
| 2 | எஸ்.கல்பனா | கலை | 3A |
| 3 | எஸ்.தர்ஷினி | கலை | 2A,B |

### கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி


| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | எஸ்.ஜெயதேவி | கலை | 3A |
| 2 | ஜே.கிரிஜா | கலை | 3A |
| 3 | எஸ்.சிந்துஜா | கலை | 2A,B |

### அத்தியார் இந்துக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 1 | பி.மேரி பவித்திரா | கலை | 2A,B |

# இலங்கை தமிழர் விடயத்தில் இந்திய அரசு மிகப்பெரும் தவறிழைத்து விட்டது

## வவுனியாவில் இடம்பெயர் மக்களை பார்வையிட்ட பின் ஸ்ரீரவிசங்கர் தெரிவிப்பு



பிச்சைக்காரர்களையே காணாத மக்கள் மற்றவர்களிடம் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் மனநிலை பாதிக்கப்படும் நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்பதை காண முடிந்தது.

இவ்வாறு வவுனியாவில் தங்க வைத்துள்ள இடம்பெயர் தமிழ் மக்களை பார்வையிட்ட வாழும் கலை அமைப்பின் தலைவர் ஸ்ரீரவிசங்கர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் தமிழர்கள் தங்கவைக்கப்பட்டு உள்ள முகாம்களை பார்வையிட்டு விட்டு நேற்று முன்தினம் சென்னை திரும்பிய வாழும் கலை அமைப்பின் நிறுவனரும், ஆன்மீக வாதியுமான ஸ்ரீரவிசங்கர் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது, இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாகி, வீடு வாசல்களை இழந்து, ஆங்காங்கே அமைக்கப்பட்டு உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். ஏறக்குறைய 8 இலட்சம் தமிழர்கள் பாதிக்கப்பட்டு இருப்பார்கள் என்று கருதுகிறேன்.

நான் நேற்று முன்தினம் முல்லைத்தீவு வவுனியா பகுதிகளில் செட்டிகுளம், அருணாசலா உட்பட 8 முகாம்களை சென்று பார்வையிட்டேன்.

மனதை கல்லாக்கிக் கொண்டுதான் அங்கு செல்ல முடியும். மனிதனாக போக முடியாது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த முகாம்களில் 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் தங்கவைக்கப்பட்டு உள்ளனர். பொறியியலாளர்கள், மருத்துவர்கள், வர்த்தகர்கள் என பல்வேறு தரப்பினர் அங்கு தங்கி உள்ளனர். பிச்சைக்காரர்களையே காணாத மக்கள் மற்றவர்களிடம் கையேந்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் பேசிய போது இப்படியே விட்டுவிட்டால் அவர்களில் பெரும் பாலானோர் மனநிலை பாதிக்கப்படும் நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்பதை காணமுடிந்தது. நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த தமிழர்களுக்கு வேட்டி, சேலை போன்றவற்றை வழங்கினோம்.

முகாம்களில் தங்கி உள்ளவர்கள் இலங்கை இராணுவத்தினரின் பாதுகாப்பில் இருக்கிறார்கள்.

இந்திய அரசு எங்களுக்கு உதவும் என்று ரொம்ப நம்பினோம். கைவிட்டு விட்டார்களே என்று வேதனையுடன் தெரிவித்தார்கள். இந்த விடயத்தில் இந்திய அரசு மிகப்பெரிய தவறை இழைத்துவிட்டதாக கருதுகிறோம்.

தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் அளவுக்கு தமிழ் தெரிந்த ஒருவரை தூதராக நியமிக்காததே இந்த பிரச்சினைக்கு முடிவு காண முடியவில்லை என்று கருதுகிறேன்.

அத்துடன், இலங்கை பிரச்சினை தீராததற்கு இங்கும் சரி, அங்கும் சரி தமிழர்களுக்கு இடையே ஒற்றுமை இல்லாததும் ஒரு காரணம் ஆகும்.

இலங்கை தமிழர் பிரச்சினைக்காக இங்கு வேலைநிறுத்தம் அல்லது உண்ணாவிரதம் போன்றவற்றை மேற்கொள்வதால் அங்கு பிரச்சினை சரியாகிவிடும் என்று சொல்ல முடியாது.

வேலைநிறுத்தம் செய்தோம். உண்ணாவிரதம் இருந்தோம் என்று திருப்தி அடையலாமே தவிர அங்கு பிரச்சினை தீர்ந்து விடாது. உணவு, உடை என்று நிவாரண உதவிகளைப் பெறும் நிலையில் முகாம்களில் தங்கி இருந்தாலும், தங்கள் சொந்த வீடுகளுக்கு செல்லவேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

இது குறித்து இலங்கை அதிபர் ராஜபக்ஷவிடம் நேற்று முன்தினம் நான் பேசினேன். முகாம்களில் தங்கி இருப்பவர்கள் சொந்த வீடுகளுக்கு உடனடியாக செல்ல முடியாத அளவுக்கு வீடு, வாசல்கள் தரை மட்டமாகி உள்ளன. அவற்றை உடனடியாக சீரமைக்க முடியாது என்று ராஜபக்ஷ தெரிவித்தார்.

தீவிரவாதத்தை வேரோடு அழித்த பின்பே அடுத்த கட்ட நடவடிக்கையை மேற் கொள்ள முடியும் என்று ராஜபக்ஷ தெரிவித்தார். இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை மூலம் பேசி தீர்த்து இருக்கலாம்.

நானே பிரபாகரனிடம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பல முறை முயன்றேன். அதற்கு பலன் கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்.

ஆனாலும் மக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். தங்களை தீவிரவாதிகள் என்று முத்திரை குத்திவிடுவார்களோ என்ற பயத்தில் உள்ளனர் என்று தெரிவித்தார். (ஓ-6)

# புலிகள் தப்பிச் செல்லாமலிருக்க கடற் பாதுகாப்பு அதிகரிப்பு

## கடற்படையின் பதில் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் முடக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள் கடல் மார்க்கமாக தப்பிச் செல்லாதிருக்க கடற்பரப்பின் பாதுகாப்பு பன்மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று கடற்படையின் பதில் பேச்சாளர் கொமாண்டர் மகேஸ் கருணாரத்ன தெரிவித்தார்.

இந்நிலையில், கடற்பரப்பில் விஷேட பாதுகாப்பு வலயங்களை அமைந்துள்ள கடற்படையினர் கடல் மார்க்கமாக தப்பி வரும் பொதுமக்களை தங்கவைப்பதற்கென பருத்தித்துறை மற்றும் புல்மோட்டை ஆகிய இரு கடற்படை முகாம்களில் இடைத்தங்கல் முகாம்களை அமைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய கடற்படையின் பதில் பேச்சாளர் மேலும் கூறியதாவது,

கடந்த மூன்று தினங்களில் வன்னியிலிருந்து படகுகள் மூலம் தப்பி வந்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களை கடற்படையினர் பாதுகாப்பாக மீட்டு குறித்த இரு இடைத்தங்கல் முகாம்களுக்கு அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு வந்த மக்களில் காயமடைந்தவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் மற்றும் உணவுகள் போன்றன அந்த இரு முகாம்களில் வைத்தே கடற்படையினரால் வழங்கப்பட்டன என்றார். (ஓ-6)

# அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களில் போரிடும் தரப்பினர் ஈடுபடுத்தப்பட வேண்டும்

## ஹிலாரி கிளின்டன் தெரிவிப்பு

(கொழும்பு)

மனிதாபிமானச் சேவைகளுக்கும் அரசியல் தீர்வு ஒன்று காண்பதற்குமான மிகப் பெரிய தேவை ஒன்று இலங்கையில் இருக்கின்றது. இனப் பிரச்சினைக்குப் பொருத்தமான – சரியான– தீர்வு காணப்பட வேண்டும் எனில் – அதற்கான கலந்துரையாடல்களில் போரிடுபவர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என அமெரிக்காவின் வெளிவிவகார செயலாளர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆசியாவின் மிக நீண்ட போரை முடிவுக்கு கொண்டுவரலாம் என்ற நோக்கத்துடன் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் படை நடவடிக்கை அங்கு சொல்ல முடியாத துன்பத்தை மக்களுக்கு ஏற்படுத்தி வருகின்றது.

25 வருட காலப் போரை நிறைவு செய்ய முற்பட்டு வரும் இலங்கை அங்கு பெரும் துன்பத்தை ஏற்படுத்தி வருகின்றது.

அது தொடர்பில் முழு உலகமும் ஏமாற்றம் அடைந்துள்ளது என்பதும் இலங்கை அரசுக்கு தெரியும் என்றார் அவர். (ஓ-6)

# நலன்புரி முகாம்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள்

(கொழும்பு)

வன்னி யுத்தப் பிரதேசத்திலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்திருக்கும் பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள நலன்புரி முகாம்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களில் தங்கியிருப்போருக்கு பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலேயே இந்த ஏற்பாட்டைச் செய்து கொடுக்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இம்மக்களின் தொடர்பாடல் வசதிகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அண்மையில் இந்த முகாம்களுக்கு தொலைபேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)







தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினால் போலியோவால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு சக்கர நாற்காலி வழங்கப்படுவதையும், அருகில் கழக உறுப்பினர்கள் மற்றும் விருந்தினர்கள் நிற்பதை முதலாவது படத்திலும் கொடிகாமம் மத்தி விவசாயி ஒருவருக்கு விதை தானியங்களை கழகத் தலைவர் லயன்ஸ் செ. சரவணமுத்து வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

> அறியமுடியாத அளவு பெரியதாகும் அறிவு என்னும் மகா சமுத்திரம். ஏதோ அங்கும் இங்கும் அலைகள் கொண்டு வந்து ஒதுக்கும் சிப்பிகளில் சிலவற்றை சேகரித்ததும் சமுத்திரத்தைப் பற்றி முழுவதும் அறிந்து விட்டதாக எண்ணி விடுகிறோம்.
>
> – ராஜாஜி

வலம்புரி

# ஆலயங்களில் நடப்பது அதிசயமா? அல்லது ஆதாரமற்ற தகவல்களா?

இறை நம்பிக்கையே இந்த உலகப் பிரபஞ்சத்தை இயக்குகின்றது.

இறை நம்பிக்கை இல்லையாயின் மனித வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை சிந்திப்பதற்கும் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும்.

பாவம், புண்ணியம் என்ற இரு பெரும் எண்ணக்கருக்களினூடே இறையியல் கருத்துக்கள் இந்த உலகில் விதைக்கப்பட்டுள்ளன.

இறைஞானிகளும் அருளாளர்களும் அள்ளித்தந்த தத்துவக் கருத்துக்கள் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துகின்றன.

'இறைநம்பிக்கைகள் பெறுமானமுடையவை. அவை மதிக்கப்படவேண்டும். அந்த நம்பிக்கைகளே மனிதப் பண்பை பாதுகாக்கின்றன' என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்கள் விரிவுரை ஒன்றில் குறிப்பிட்ட கருத்து இங்கு நோக்குதற்குரியது.

மனித சமுதாயம் எத்துணை விஞ்ஞான, தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம் அடைந்திருந்தாலும் கடவுள் நம்பிக்கை இம்மியும் குறைவதில்லை என்பது நிரூபிக்கக்கூடிய உண்மை.

இத்தகைய இறை நம்பிக்கை நீண்டு நிலைபெற்றுச் செல்வதற்கு இந்தப் பிரபஞ்சத்தின் படைப்பே மூலகாரணமாக அமைகின்றது.

இயற்கையின் அசைவும், எம்முன் இடம்பெறும் பாரிய மாற்றங்களும் எங்களை அறியாமலே நடைபெறும் அற்புதங்களும் –அதிசயங்களும் இறைநம்பிக்கையை வலுவடையச் செய்கின்றன.

அவ்வகையில் கடந்த சில வாரங்களாக யாழ்ப்பாணத்திலுள்ள இந்து ஆலயங்களிலும், கத்தோலிக்க தேவாலயங்களிலும் அற்புதங்கள் இடம்பெறுவதான தகவல்கள் ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொள்வதும் அற்புதங்கள் நடப்பதாக கருதப்படும் ஆலயங்களை நோக்கி மக்கள் சாரி சாரியாக செல்வதும் நடந்தவண்ணமுள்ளன.

எனவே இது விடயத்தில் தெளிந்த சிந்தனையுடனான விளக்கங்கள் தேவை.

இறைவனின் வெளிப்படுகையும், அற்புத நிகழ்வுகளும் இந்தப் பிரபஞ்சத்தின் ஒடுக்கத்தில் தோற்றம் பெறும் என்பதே பரமஞானம் பெற்ற அருளாளர்களின் வாக்கு.

ஆக, யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதாகக் கூறப்படும் அற்புதங்கள் நிஜமானவையாயின், வேதசாஸ்திர வித்தகர்கள் இதுபற்றி ஆய்ந்து, மெய்ப்பொருளை மக்களுக்கு எடுத்துக் கூற முன்வரவேண்டும்.

ஏனெனில் மாதா சொரூபங்களில் இருந்து இரத்தக் கண்ணீர் சொரிவதான தகவல்களுக்குப் பின்னரே வன்னிப் பேரவலம் நடந்ததென்னும் சமூக விஞ்ஞான உண்மை எங்கள் நினைவுகளில் பதிவாகியுள்ளது.

ஆகையால் இச் சந்தர்ப்பத்தில் ஞான நல்லறிவு மக்களுக்கு அவசர தேவையாகவுள்ளது.

# இடம் பெயர்ந்தவர்களின் மனித நேயத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உடனடி நிதியுதவி தேவை

## கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் கோரிக்கை

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்திருக்கும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கான மனிதநேயத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசரமாக நிதியுதவி அவசியம் எனக் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு வந்திருக்கும் மக்களுக்கான உணவுகள், உடுதுணிகள், தற்காலிக கூடாரங்கள் மற்றும் குடிநீர் போன்றவற்றை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதாக வவுனியாவுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்து வந்திருக்கும் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தின் மனிதநேய இணைப்பாளர் நெய்ல் புனே தெரிவித்துள்ளார்.

"கைக்குழந்தைகள் பல தொற்றுநோய்களுக்கு உள்ளாகியிருப்பதுடன் பல சிறுவர்களும், பெண்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவான மக்கள் மாதக்கணக்காக ஒரே ஆடைகளையே அணிந்திருப்பதால் அவை பழுதடைந்திருப்பதைக் காணக்கூடியதாகவிருந்தது" என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து, குடிநீர், சுகாதாரம், போசாக்கு, தற்காலிக கூடாரங்கள், உடுதுணிகள் போன்றவற்றுக்கு தற்பொழுது உடனடியான நிதியுதவி தேவைப்படுகிறது என நெய்ல் புனே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்ந்துவரும் மோதல்களில் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு 155 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி தேவையென ஐக்கிய நாடுகள் சபை கடந்த பெப்ரவரியில் கோரிக்கை விடுத்திருந்தன.

இந்த நிலையில் மேலும் 90 ஆயிரத்திற்கு அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க உடனடி நிதியுதவி தேவையென ஐ.நா. அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

"ஒரு வருடத்துக்கும் மேலாகத் தொடரும் மோதல்களால் இந்த மக்கள் தமது வீடுகளிலிருந்து பலவந்தமாக வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவ்வாறு சிக்கல்களுக்கும் மத்தியில் அவர்கள் உயிர்வாழ்வது ஆச்சரியமளிக்கிறது" என அவர் தெரிவித்துள்ளார்.

முகாம்களில் ஏற்பட்டிருக்கும் இடப்பற்றாக்குறை குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருக்கும் அவர், இடம்பெயர்ந்த மக்களைத் தங்கவைப்பதற்கு அரசாங்கம் மேலும் பல காணிகளை ஒதுக்கித் தரவேண்டும் எனக் கூறியுள்ளார்.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த முதியவர்கள் சிலர் வெளியேற முன்னர் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும், மேலும் பல முதியவர்கள் இன்னமும் முகாம்களில் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய புனே, முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஐ.நா.வின் உள்ளூர் பணியாளர்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை வீடுத்துள்ளார். (ஓ-6)

# அத்தியாவசியப் பொருட்கள் நேற்று வவுனியாவுக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு விநியோகிக்கவும் மற்றும் வடக்கிலுள்ள படையினரின் பயன்பாட்டுக்காகவும் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்ட அத்தியாவசியப் பொருட்கள் நேற்று லொறிகளின் மூலம் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தொழில் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை முதலீட்டுச் சபை ஏற்பாட்டில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கட்டு நாயக்கவிலிருந்து நேற்று புறப்பட்ட லொறிகளில் எக்ஸ்ரே இயந்திரம், உலருணவு, ஆடைகள், சமையலறை உபகரணங்கள், மற்றும் துவிச்சக்கரவண்டிகள் என்பன அனுப்பி வைக்கப்பட்டன. இது தொடர்பான வைபவத்தில் தொழில் அபிவிருத்தி மற்றும் முதலீட்டு அபிவிருத்தி அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவும் கலந்து கொண்டதாக அமைச்சு அறிவித்துள்ளது. (ஓ-6)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ தேசிய திட்டம்

(கொழும்பு)

வன்னியிலிருந்து அரசகட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்த பொதுமக்களுக்கு உதவ நாடளாவிய ரீதியில் தேசிய திட்டமொன்று அமுல்படுத்தவுள்ளது.

தகவல் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் நேற்று நடைபெற்ற அரசாங்க மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட விசேட சந்திப்பில் இது பற்றி தீர்மானிக்கப்பட்டது.

அரச தனியார் ஊடகங்கள் பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் இத்திட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உலர் உணவு, குடிநீர், குழந்தைப் பால்மா, புத்தாடைகள், பிஸ்கட் வகைகள் மற்றும் சுகாதார உபகரணங்கள் என்பவற்றைச் சேகரிக்க முடிபு செய்யப்பட்டுள்ளது.

இவற்றை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், மெக்கலம் வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபன நிலையம் மற்றும் இலங்கை ஒலிப்பரப்புக் கூட்டுத்தாபன நிலையம் அல்லது ஏனைய தனியார் ஊடகங்கள் அறிவிக்கும் இடங்களில் கையளிக்கலாம்.

அத்துடன் நாடு முழுவதிலுமுள்ள பிரதேச செயலங்களிலும் இவ்வாறான உதவிப் பொருட்களைப் பொறுப்பேற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா அறிவித்துள்ளார்.

(ச-5)

# வெள்ளி நற்சிந்தனை 68

## பக்தியின் மொழி தமிழ்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

மனை வாழ்க்கையென்பது இல்லறம் எனச் சிறப்பாகப் பேசப்படுவது நிலையாக ஓரிடத்தில் கூடி வாழ்வது எல்லோருக்கும் இன்பம் தரும். அந்த வாழ்க்கையில் இருக்குமிடமும் நன்றாக அமைய வேண்டுமென எல்லோரும் விரும்புவர். அத்துடன் சுற்றத்தவரும் பெற்ற மக்களும் அண்டை அயலிலுள்ளவர்களும் பெண்களும் சூழ இருக்க வேண்டும் என்பதே மனை வாழ்க்கையின் சிறப்பு என்றும் கருதப்படுகிறது. இத்தகைய ஆரவாரமான வாழ்க்கையைப் பற்றிய மதிப்பீட்டைச் சுந்தரமூர்த்திநாயனார் வேறு விதமாகத் தனது தேவாரப் பாடலிலே பாடியுள்ளார்.

சுந்தரர் பெற்றோருடைய அன்பான அரவணைப்பிலே வாழும் சிறு பராயத்திலே, அவர்களைப் பிரிந்து அரசருக்கு வளர்ப்பு மகனாக வாழும் பேறு பெற்றவர். திருமண நிலையிலும் முதல் திருமணத்தின் போது இறைவனால் தடுத்து ஆட் கொள்ளப்பட்டவர். பின்னர் இரு பெண்களை ஒன்றன் பின் ஒன்றாகத் திருமணம் செய்து பல அல்லல்களை எதிர் கொண்டவர். அதனால் மனை வாழ்வு என்பது அவரைப் பொறுத்த வரையில், மிகச் சிக்கலானதென்றே காணப்பட்டது. செல்வம் இல்லாத மனை வாழ்க்கையில் இன்பம் காண முடியாது. தனக்குத் தேவையானவற்றை இறைவனிடம் தோழமையுணர்வுடன் கேட்டுப் பெற்றுக் கொண்டாலும் அருள் வாழ்க்கையே சிறந்தது என்பதே சுந்தரர் தனது வாழ்வியலில் கண்ட தெளிவாகும்.

எனவே மனை வாழ்க்கையில் துன்பம் தொடரும் போது அதை வெல்வதற்கான வழியைச் சுட்டிக் காட்டும் சுந்தரர் பாடல்கள் எம்மையும் சிந்திக்கத் தூண்டுகின்றன. மனை வாழ்க்கையை விடத் திருக்கோயில் வழிபாடே நிலையான இன்பந்தரும் எனக் கூறுகிறார். " திருப்புறம்பயம்" என்னும் திருத்தலத்தில வீற்றிருக்கும் இறைவனைத் தொழும்படி தனது நெஞ்சத்தை ஆற்றுப்படுத்துகிறார். அங்குள்ள இறைவன் தோற்றத்தை இயற்கையின் கோலமாகக் காட்டுகிறார். நிறை நிலாவையும் செம்மையான சடைக் கற்றைகளிடையே பாயும் கங்கை நதியுமாகத் தோன்றும் இறைவன் மகிழ்த்துறையும் திருக் கோயிலின் சூழல் மகிழ்வைத் தரும். மல்லிகை, செண்பகம் போன்ற புதியமலர்கள் மலர்ந்திருப்பதால் பகற்பொழுதெல்லாம் நறுமணம் வீசும் இடமாக உள்ளது. இத் திருக் கோயில் வழிபாட்டல் நீ மகிழ்வுடன் வாழலாம் எனத் தனது நெஞ்சத்திற்கு எடுத்துரைத்துள்ளார்.

போதும் என்ற ஒரு மன நிலையை வழிபாட்டு வாழ்வியல் அநுபவத்தால் பெற்ற சுந்தரர் அதை எல்லோருக்கும் அறிவிக்க விரும்புகிறார். ஆரவாரமான மனையின் சுற்றுப் புறச் சூழலை விட இயற்கையழகும் நறுமணமும் கொண்ட கோயிற் சூழலுக்கு எம்மை அழைத்துச் சென்று அறிவூட்டப் பாடுகிறார்.

"பதியுஞ் சுற்றமும் பெற்ற மக்களும் அண்டை யாரவர் பெண்டிரும்

நிதியிலிம்மனை வாழும் வாழ்க்கையு நினைப் பொழிமட நெஞ்சமே

மதியஞ் சேர் சடைக் கங்கை யானிட மகிழ மல்லிகை செண்பகம்

புதிய பூ மலர்ந்தெல்லி நாறும் புறம் பயந்தொழப் போதுமே"

# இலங்கையில் போரை நடத்தி தமிழர்களை அழிக்கும் சோனியாவை தமிழகத்துக்குள் விடமாட்டோம்

## தமிழ் திரையுலகம் முழக்கம்

(சென்னை)

அரசியல் கட்சிகளே இதுவரை கிளப்பாத முழக்கத்தோடு 'ஈழப்போராட்டத்தில் களம் இறங்கியிருக்கிறது தமிழ்த் திரையுலகம். இலங்கையில் தமிழர்களைக் கொன்று



குவிக்கும் போரை நடத்திவரும் சோனியாவை தமிழகத்துக்குள் விடமாட்டோம் என்பதுதான் தமிழ்த் திரையுலகத்தின் முழக்கம்.

ம.தி.மு.க அலுவலகமான தாயகத்தில் உண்ணாவிரதம் இருக்கும் பெண்கள் அமைப்பினரைச் சந்திக்க இயக்குநர் பாரதி ராஜா தலைமையில் சென்ற திரைத்துறை பிரமுகர்கள், அங்கேயே ஒலிவாங்கியை பிடித்து மத்திய அரசுக்கு எதிராகவும், குறிப்பாக சோனியாவுக்கு எதிராகவும் கொந்தளிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

இது தொடர்பில் இயக்குனர்கள் வட்டாரத்தில் கருத்து தெரிவிக்கையில்,

ஈழத்துக்காக நாங்கள் புதிதாகக் குரல் கொடுக்கவில்லை. தமிழக அரசுத் தரப்பிலிருந்து எங்களைத் தொடர்பு கொண்ட சிலர், ஈழப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மத்திய அரசுக்கு பலவிதத்திலும் அழுத்தம் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம் என்றனர்.

மேலும் தமிழக அரசோ இறையாண்மைக்கு குந்தகமாகப் பேசாத போதும், சீமானின் பேச்சு காங்கிரசுக்கு எதிராக இருந்ததால் வேண்டுமென்றே தேசிய பாதுகாப்பு சட்டத்தில் அவரை சிறையில் தள்ளியது.

கடலூர் நீதிமன்றில் அவரைப் பார்க்கச் சென்ற இயக்குநர்கள் ஆர். சுந்தரராஜன், ஆர்.கே. செல்வமணி ஆகியவர்களை வேண்டுமென்றே ஒரு நாள் சிறையில் வைத்தார்கள்.

இதையெல்லாம் சகித்துக் கொண்டோம்.

ஆனால், ஈழத்தில் இரண்டரை இலட்சம் தமிழ் மக்களின் வாழ்க்கை முடியப் போகிற அபாயத்தில் இருந்தும், மத்திய – மாநில அரசுகள் கொஞ்சமும் கண்டுகொள்ளாமல் இருப்பதைத்தான் தாங்கிக்கொள்ள இயலவில்லை.

ஏ.ஆர் ரஹ்மான் உட்பட, சினிமாத் துறையின் முக்கிய ஆட்கள் பலருக்கும் ஈழத்துயரங்களின் படங்களும் செய்திகளும் மெயிலில் வந்து கொண்டே இருக்கின்றன. அதனால் தான் இயக்குநர் பாரதிராஜாவோடு உணர் வாளர்கள் பலரும் கலந்து பேசி, காங் கிரஸ் போட்டியிடும் பதினாறு தொகுதி களிலும் திரையுலகத்தினர் தீவிரப் பிரசாரம் செய்ய முடிவெடுத்துள்ளோம்.

சோனியா தேர்தல் பிரசாரத்துக்காகத் தமிழகம் வரும் பட்சத்தில் எங்கள் எதிர்ப்பைக் கடுமையாக காட்டுவோம். அங்கே தமிழர்களையும், இங்கே தமிழர்களின் உணர்வுகளையும் கொன்று விட்டு தமிழகத்துக்கு சோனியா வரக்கூடாது! என்றவர்கள் தொடர்ந்தனர்.

கட்சி சார்பான திரைப் புள்ளிகள் மூலமாக எங்களைப் பிளவுபடுத்தும் முயற்சிகளும் நடந்தது. அதை முறியடிக்கத்தான் தமிழ்த் திரையுலக தமிழ் ஈழ ஆதரவு உணர்வுக் குழு என்ற பெயரில் தனி அமைப்பு தொடங்கியிருக்கிறோம். அதன் சார்பாக காங்கிரசுக்கு எதிராக இயக்குநர்கள் அமீர், சீமான் இருவரையும் தேர்தலில் போட்டியிட வைக்கவும் முடிவெடுத்திருக்கிறோம்.

ஈழப் போரைக் கண்டித்து நடந்த உண்ணாவிரதத்தில், ராஜபக்ஷவுக்கு கடுமையாக கண்டனம் தெரிவித்த ரஜினிகாந்த், எங்களுக்கு மிகப் பெரிய சக்தி. பாரதிராஜா, சத்யராஜ், அமீர் போன்றோரின் வேண்டுகோளை ஏற்று, ரஜினிகாந்த்தும் காங்கிரசுக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொள்ள சம்மதித்திருக்கிறார்.

அத்தோடு உண்ணாவிரதப் போராட்டத்தின் போது ரஜினி பேசிய பேச்சை ஒலி நாடாக்களாகப் போட்டு எங்கள் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவோம் பெங்களூரில் இருக்கும் ரஜினி மன்றங்கள் எல்லாம் ஈழ விவகாரத் தைக் கையில் எடுத்துப் போராடிக் கொண்டிருக்க இங்கேயுள்ள ரஜினி மன்றங்களும், விஜய், அஜீத் போன்ற மற்ற நடிகர்களின் மன்றங்களும் எங்கள் போராட்டத்தில் இணைந்து கொள்ளும் என நம்புகிறோம் என்றனர். (ஓ-6)

## இலங்கையில் போரை நிறுத்தக்கோரி சட்டத்தரணிகள் போராட்டம்

(அரியலூர்)

இலங்கையில் உடனடியாக போரை நிறுத்த வேண்டும் என்றும், அங்கு உள்ள அப்பாவி தமிழர்களை ஈவு இரக்கமின்றி படுகொலை செய்து வரும் இலங்கை அதிபர் ராஜபக்ஷவை கண்டித்து நேற்று முன்தினம் அரியலூரில் சட்டத்தரணிகள் போராட்டம் நடத்தினார்கள்.

அரியலூர் நீதிமன்றம் முன்பு நேற்று முன்தினம் காலையில் 50க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் திரண்டு வந்தனர். இலங்கை தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்த எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறி மத்திய, மாநில அரசுகளை கண்டித்து கோஷம் போட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு இருந்த சட்டத்தரணிகளுடன் சேர்ந்து இலங்கை அரசுக்கு எதிராக சிறிது நேரம் கோஷம் போட்டார். பின்னர் அங்கிருந்து சென்றார்.

திருமாவளவன் அங்கிருந்து சென்ற பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்த சட்டத்தரணிகள் பகுதியில் இருந்து சிலர் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சியினரை கண்டித்து கோஷம் எழுப்பினார்கள்.

இதனால் சட்டத்தரணிகளுக்கும், தி.மு.க. கூட்டணி கட்சியினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த வாக்குவாதம் முற்றி மோதல் ஏற்பட்டது. நிலைமை மோசமானதை தொடர்ந்து அங்கு பாதுகாப்பு பணியில் பெருமளவு பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டனர். (ஓ-6)


## இலங்கை பிரச்சினையில் மத்திய அரசின் தெளிவற்ற வெளியுறவு கொள்கைக்கு தோல்வி

### அத்வானி தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை பிரச்சினையில் இந்தியாவின் பங்கை வெறும் பார்வையாளர் என்ற அளவுக்கு குறைத்து விட்டதாக பா. ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் அத்வானி தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை பிரச்சினையில் மத்திய அரசின் தெளிவற்ற வெளியுறவு கொள்கைக்கு தோல்வி ஏற்பட்டுள்ளது. இந்தியாவின்




பங்கை வெறும் பார்வையாளர் என்ற அளவுக்கு குறைத்து விட்டது. போரை நிறுத்துமாறு இலங்கை அரசை நிர்ப்பந்திக்க மத்திய அரசு தவறி விட்டது.

இலங்கையின் ஒற்றுமையை பாதுகாப்பது, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பது ஆகிய இரு கொள்கைகள் அடிப்படையில் தான் இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

எனவே, உடனடியாக போரை நிறுத்தி அமைதி பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். (ஓ-6)

## அத்தியாவசிய பிரச்சினைகளைவிட ஈழத்தமிழர் பிரச்சினையே தமிழக மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது

### பா.ஜ.க. மாநிலத் தலைவர் இல. கணேசன் தெரிவிப்பு



(சென்னை)

அத்தியாவசியப் பிரச்சினைகளை விட, ஈழத்தமிழர்பிரச்சினை தமிழக மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது, என்று பா. ஜ.க. மாநிலத் தலைவர் இல. கணேசன் கூறியுள்ளார்.

தென் சென்னை லோக் சபா தொகுதியில் போட்டியிட, தேர்தல் அதிகாரி பாலாஜியிடம், இல .கணேசன் நேற்று முன்தினம் மனுத் தாக்கல் செய்தார்.

மனு தாக்கல் செய்த பின்னர் அவர் கூறியதாவது,

இந்தத் தேர்தல் கருணாநிதியா, ஜெயலலிதாவா என்று முடிவு செய்யும் தேர்தல் அல்ல. அத்வானியா, சோனியாவின் கைப்பாவையா என்பதை முடிவு செய்யும் தேர்தல்.

தமிழகத்தில் ஒரு தமிழன் கூட இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக வேறுபட்டு நிற்கவில்லை. மத்திய அரசு தான் இலங்கை அரசைக் கண்டித்து போரை நிறுத்தி இருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. அதை தட்டிக் கேட்கக் கூட திராணியற்ற நிலையில் தி.மு.க., உள்ளது.

அமெரிக்கா போன்ற நாடுகளின் தலையீட்டால் 48 மணி நேரம் போர் நிறுத்தம் ஏற்பட்டது. அது நீடித்து இருக்க வேண்டும்.

ஈழத் தமிழர்களுக்கு எல்லா தரப்பிலும் ஆதரவு உள்ளது. விலைவாசி உயர்வு போன்ற அத்தியாவசியப் பிரச்சினைகளை விட, ஈழத் தமிழர் பிரச்சினை தமிழக மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தான் இதுவரை எதிர்த்து வந்த ஜெயலலிதா, திடீரென்று உண்ணாவிரதம் இருந்தார். காங்கிரஸ் அரசும் மருந்துகளை அனுப்பி நாடகம் ஆடியது. மக்களின் நாடித் துடிப்பை அறிந்து தான் இங்குள்ளவர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

அரசியல் கட்சியினர் இலங்கைத் தமிழர் பிரச்சினையை குழப்புவதாக ஸ்டாலின் கூறியுள்ளார். அப்படி அரசியல் கட்சியினர் தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையை குழப்புகின்றனர் என்றால் முதல்வர் எதற்காக பொது வேலைநிறுத்தம் அறிவிக்க வேண்டும்? என்று இல. கணேசன் கேள்வியெழுப்பியுள்ளார். (ஓ-6)

## இலங்கைத் தமிழர்கள் படுகொலை தொடர்பான சி.டி.யை வெளியிட அனுமதி கோரி சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு

(சென்னை)

தென் சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தபசிகுமரன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் தினசரி அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள். இந்தச் சம்பவங்களை அவ்வப்போது தொலைக் காட்சிகளில் ஒளி பரப்பிய காட்சிகளை தொகுத்து ''இலங்கையில் தினம் தினம் படுகொலை – இனிமேல் என்ன செய்யப்போகிறோம்'' என்ற தலைப்பில் சி.டியை தயாரித்து உள்ளோம்.

காங்கிரசார் கூறிய புகார் அடிப்படையில் இந்த சி.டி.யை வெளியிட தேர்தல் ஆணையகம் அனுமதி மறுத்து விட்டது. எனவே இந்த சி.டி.யை வெளியிட அனுமதிக்க வேண்டும் இதற்கான பொதுக் கூட்டம் நடத்தவும அனுமதிக்க வேண்டும் என்றுள்ளது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி கே. சுகுணா, இது பற்றி எதிர்வரும் 27 ஆம் திகதிக்குள் பதில் தரும்படி மாம்பலம் பொலிஸாருக்கு அறிவித்தல் விடுக்கும் படி உத்தர விட்டார். (ஓ-6)

# டி வில்லியர்ஸ் சதம்; டில்லி அணி வெற்றி
# போராடிய சென்னை அணி பரிதாபம்



(டர்பன்)

டி வில்லியர்ஸின் அதிரடியான சதத்தின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி. எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 கிரிக்கெட் தொடர் தென்னா பிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று டர்பனில் நடைபெற்ற லீக் சுற்றின் 9ஆவது போட்டியில் சேவாக் தலைமையி லான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதியது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி ஆரம்பத்தில் காம்பீர் பூச்சியத்துடனும் சேவாக் 6 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டம் இழக்க 2 ஓவர்களில் 8 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக இணைந்த டி வில்லியர்ஸ், டில்சான் ஜோடியின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் சரிவிலிருந்து நிமிர்ந்தது.

இதில் திலகரட்ண டில்சான் 27 பந்துகளில் (7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 50 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க டில்லி டேர் டேவில்ஸ் அணி 8.3 ஓவர்களில் 76 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டை இழந்தது.

எனினும் மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஏபி டி வில்லியர்ஸ் 51 பந்துகளில் சதம் விளாசி அணியை பலமான நிலைக்கு தூக்கி நிறுத்தினார்.

இறுதியில் டில்லி டேர் டேவில்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ஏபி டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 54 பந்துகளில் (5 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 105 ஓட்டங்களையும் முரளி கார்த்திக் 16 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 18 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்துவீச்சில் லக்ஸ்மிபதி பாலாஜி 4 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கோனி, அல்பி மோர்கல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 190 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு ஆரம்பத்தில் ஹைடன்-பட்டேல் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இதில் பட்டேல் 15 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 16 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5.2 ஓவர்களில் 57 ஓட்டங்களை எடுத்து. முதலாவது விக்கெட்டை இழந்தது தொடர்ந்து களமிறங்கிய ரெய்னா, ஹைடனுடன் இணைந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை குவித்து நம்பிக்கையளிக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

எனினும் மத்யூ ஹைடன் 27 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 57 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 8 ஓவர்களில் 90 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை இழந்தது. தொடர்நது களமிறங்கிய அணித் தலைவர் தோனி 5 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து ஆட்டம் இழந்து ஏமாற்றினார்.

தொடர்ந்து பிளின்டொப் களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ரெய்னா 27 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 41 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.


இறுதிவரை போராடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக் களை இழந்து 180 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் பிளின்டொப் 16 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்ததுடன் அல்பி மோர்கல் ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சல் சங்க்வான் 3 விக்கெட்டுக்களையும் டானியல் விக்டோரி 2 விக்கெட்டுக்களையும் நெகரா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 2 ஆவது வெற்றியை பதிவு செய்ததுடன் தனது மூன்றாவது போட்டியில் விளையாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இரண்டாவது தோல்வியைச் சந்தித்தது.

இத் தொடரிலேயே முதலாவது சதத்தை பதிவு செய்யதுடன் டில்லி டேர் டேவில்ஸ் அணியின் வெற்றிக்கு திருப்பு முனை அமைத்த ஏபி டி வில்லியர்ஸ் ஆட்டநாயகனாக தெரிவானார்.



## சுப்பர் ஓவர் முறையில் வோர்ன் அணி வெற்றி

சுப்பர் ஓவர் முறையில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று கேப்டவுனில் நடைபெற்ற லீக் சுற்றின் 10ஆவது போட்டியில் மக்குலம் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை எடுத்தது.

இதில் யூசுப்பதான் 21 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் மஸ்கரன்ஹஸ் 27, ஜடேஜா 22, ராஜிட் ஆட்டம் இழக்காமல் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் இசாந்த் சர்மா, அனுரீட் சிங் மற்றும் அஜந்த மென்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக் களை யும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை எடுக்க போட்டி சமனிலையானது.

இதில் சௌரவ் கங்குலி 30 பந்துகளில் (4 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட 46 ஓட்டங்களையும் கிறிஸ் கெயில் 33 பந்துகளில் (2 பவுணடரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் ஜஸ் பால் சிங் 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் கம்ரான் ஹான் 3 விக்கெட்டுக்களையும் ஷேன் வோர்ன் 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் போட்டி சமநிலையாக சுப்பர் ஓவர் முறையில் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதில் இரு அணிகளுக்கும் தலா ஒரு ஓவர்கள் வழங்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி ஒரு ஓவர் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 15 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 4 பந்துகளில் 18 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 67



உலகக் கிண்ண தொடரில் லீக் சுற்றில் 5 போட்டிகளிலும் வெற்றி பெற்ற இலங்கை அணி காலிறுதிப் போட்டிக்கு தெரிவானது.

1996ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் திகதி பைசலாபாத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இலங்கை அணி இங்கிலாந்து அணியைச் சந்தித்தது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்தது 235 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிறப்பாக செயற்பட்ட முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 37 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.


பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 40.4 ஓவர்களில் 5 விக்கெட்டை மாத்திரம் இழந்து 236 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றது.

இந்நிலையில் அரையிறுதிப் போட்டியில் இலங்கை அணி இந்திய அணிய்யை 1996ஆம் ஆண்டு மார்ச் 13ஆம் திகதி கொல்கத்தாவில் சந்தித்தது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி பணித்ததுக்கு அமைவாக முதலில் துடுப்பெடுத்தாடி இலங்கை அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் ஆட்டமிழக்காமல் 5 ஓட்டங்களை எடுத்தார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 34.1 ஓவர்களில் 120 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 8 விக்கெட்டுக்களை இழந்தது.

இதனால் ஆத்திரம் அடைந்த இந்திய ரசிகர்கள் இலங்கை அணியினர் மீதுகல்வீச்சில் ஈடுபட்டனர்.




இதனால் போட்டி இடை நிறுத்தப்பட்டதுடன் இலங்கை அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதனால் இலங்கை அணி உலகக் கிண்ண தொடர் ஒன்றில் முதல்முறையாக இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இதில் முரளிதரன் 7.1 ஓவர்கள் பந்துவீசி 29 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து ஒரு விக்கெட்டை சாய்த்தார்.

பாலா

(பயணிக்கும்)

## அப்ரிடி சுழலில் சுருண்டது ஆஸி.
## பாகிஸ்தான் அணி வெற்றி



(டுபாய்)

அப்ரிடியின் துல்லியமான பந்து வீச்சின் மூலம் முதலாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அவுஸ்ரேலிய அணியை வீழ்த்தியது.

பாகிஸ்தான்-அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் அபுதாபி, டுபாய் ஆகிய நாடுகளில் நடைபெறுகின்றது.

இதில் முதலாவது ஒரு நாள் போட்டி நேற்றுமுன்தினம் டுபாயில் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்ற பெற்ற அவுஸ்ரேலிய அணி அப்ரிடியின் துல்லியமான சுழலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 38.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 168 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹோப்ஸ் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும் ஹடின், வோட்சன் ஆகியோர் 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சயிட் அப்ரிடி 10 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் அஜ்மல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 169 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 44.1 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை மாத்திரமிழந்து 171 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் காம்ரன் அக்மல் 48 ஓட்டங் களையும் மிஷ்பா உல் ஹக் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும் மலிக், அப்ரிடி ஆகியோர் தலா 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஹென்பென் ஹயூஸ், ஹோப்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணியின் அப்ரிடி தெரிவானார்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# குடும்பப் பெண் குத்திக்கொலை

கணவனின் தாக்குதலுக்கு இலக்கான குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாவில் லேன் ஆனைக்கோட்டையை சேர்ந்த சீலன் அமுதா (வயது 37) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார். குடும்பத் தகராறு காரணமாகவே கணவனினால் பிரஸ்தாப பெண் குத்திக் கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-1)

# சிறிலங்கா இன்சூவரன்ஸின் பணியாளரைக் காணவில்லை

சிறிலங்கா இன்சூவரன்ஸ் நிறுவன யாழ்.பிராந்திய போர்முலா பிளஸ் தொழில்நுட்ப உத்தியோகத்தர் காணாமல் போயுள்ளார். வடக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த நாகசெல்வம் ராஜகாந்தன் (வயது 35) என்பவரே காணாமல் போயுள்ளார். நேற்று முன்தினம் காலை மூளாய் வீதியிலுள்ள தனது வீட்டிலிருந்து யாழ். நகரிலுள்ள சிறிலங்கா இன்சூவரன்ஸ் நிறுவனத்திற்கு பணிக்காக சென்றுள்ளார். ஆனால் அவர் நிறுவனத்திற்கு செல்லவில்லை அத்துடன் நேற்று வரை வீடு திரும்பவில்லை எனவும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவ உடனடி நிதியுதவி தேவை!

## ஐ.நா. அவசர கோரிக்கை

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்திருக்கும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கான மனிதநேயத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவசரமாக நிதியுதவி அவசியம் என கொழும்பிலுள்ள ஐக்கியநாடுகள் அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு வந்திருக்கும் மக்களுக்கான உணவுகள், உடுதுணிகள், தற்காலிகக் கூடாரங்கள் மற்றும் குடிநீர் போன்றவற்றை வழங்குவதில் சிரமங்கள் காணப்படுவதாக வவுனியாவுக்குச் சென்று அங்குள்ள நிலைமையை ஆராய்ந்து வந்திருக்கும் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தின் மனிதநேய இணைப்பாளர் நெய்ல் புனே தெரிவித்துள்ளார்.

கைக்குழந்தைகள் பல தொற்றுநோய்களுக்கு உள்ளாகியிருப்பதுடன் பல சிறுவர்களும் பெண்களும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். பெருமளவான மக்கள் மாதக்கணக்காக ஒரே ஆடைகளையே அணிந்திருப்பதால் அவை பழுதடைந்திருப்பதை காணக்கூடியதாகவிருந்தது.

இந்த நிலையில் மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து, குடிநீர், சுகாதாரம், போஷாக்கு, தற்காலிக கூடாரங்கள், உடுதுணிகள் போன்றவற்றுக்கு எமக்குத் தற்பொழுது உடனடியான நிதியுதவி தேவைப்படுகிறது ன நெய்ல் புனே தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தொடர்ந்துவரும் மோதல்களில் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு 155 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி தேவையென ஐக்கிய நாடுகள் சபை கடந்த பெப்ரவரியில் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் மேலும் 90ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க உடனடி நிதியுதவி தேவையென ஐ.நா. அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது. (ச-5)

## போர் நிறுத்தத்தை வலியு...

தலைமையில் நேற்று இரண்டாவது நாளாக அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்ற போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, உள்துறை அமைச்சர் சிதம்பரம், பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே நாராயணன், வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கூட்ட த்தின் பின்னர் இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் தெரிவித்ததாவது,

இலங்கையில் போர் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களின் நிலை குறித்து இந்தியா கவலை கொள்கிறது. கடந்த மூன்று தினங்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் போரற்ற பிராந்தியமாக அறிவிக்கப்பட்ட பகுதியில் இருந்து அரச கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்திருப்பதாக தெரிகிறது. அதேவேளை ஆயிரக்கணக்கான மக்கள் இன்னமும் ஆபத்தில் சிக்கியிருக்கின்றனர்.

இலங்கையில் தொடர்ந்து அப்பாவி மக்கள் கொல்லப்படுவது மிகுந்த அதிருப்தி அளிப்பதாக உள்ளது. அது நிறுத்தப்பட வேண்டும். அனைத்து வகையான தாக்குதல்களும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது என அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-14)

## மோதலுக்கு முடிவுகட்ட...

தமிழர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய, அவர்களை நெருங்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்றும் ஐ.நா. குற்றம் சாட்டியுள்ளது.

இலங்கை நிலைவரம் குறித்து விவாதிக்க ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் உறுப்பினர்களாக உள்ள 15 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

இதில் அதிகாரபூர்வ முடிவுகள் அல்லது தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.

இது தொடர்பாக பாதுகாப்பு கவுன்சில் தலைவர் மேலும் கூறியதாவது, விடுதலைப் புலிகள் உடனடியாக ஆயுதங்களை கீழே போட்டு பயங்கரவாதத்தை கைவிடவேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதிகளில் எஞ்சியுள்ள தமிழர்களை பாதுகாப்பான பகுதிகளுக்கு கொண்டுவர ஐ.நா. உதவியுடன் நடக்கும் நடவடிக்கைகளை அனுமதிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் நடவடிக்கைகளுக்கு திரும்ப வேண்டும். வன்னிப் பகுதியில் மனிதநேய நிலை கவலையளிப்பதாக உள்ளது.

இப்பகுதியில் மோதல் நடக்கும் இடங்களில் அப்பாவிகள் சிக்கியுள்ளனர். அப்பாவிகளை மோதல் பகுதியிலிருந்து மீட்டு வெளியில் கொண்டுவர ஐ.நா. உறுப்பு நாடுகளும் அவசர மனிதநேய உதவிகளில் ஈடுபடவேண்டும் இவ்வாறு அவர் கூறினார். (ச-5,14)

## இந்தியத்...

தகவல்களை கேட்டறிந்து கொண்டனர்.

வன்னியில் உருவாகியுள்ள நிலைமை தமிழகத்தில் பெரும் உணர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் பின்னணியில் இப் பிரச்சினை தொடர்பாக எவ்வாறான அணுகுமுறையைக் கையாள்வது என்பதையிட்டு முடிபெடுப்பதை நோக்கமாக கொண்டே இந்த ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## இலங்கை...

சட்டவிதிகளுக்கு உட்பட்டு அனைத்துதரப்பினரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும். இது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை தொடர்பு கொண்டு பேசியுள்ளோம் என்றார். (ச-5,14)

## வன்னியிலிருந்து வந்த...

வரை 11 ஆயிரத்து 147 பொதுமக்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இவர்கள் திருநகர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, மிருசுவில் றோமன் கத்தோலிக்க வித்தியாசாலை, கைதடி சிறுவர் இல்லம், கைதடி சித்த மருத்துவத்துறை மாணவர் விடுதி, பனை அபிவிருத்தி நிறுவன வளாகம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மிக விரைவில் நலன்புரி முகாம்களுக்கு மாற்றப்படவுள்ளனர்.

கைதடி பனை அபிவிருத்தி நிலையக் காணியில் அமைக்கப்பட்டுவரும் நலன்புரி நிலைய வேலைகள் பூர்த்தியடைந்ததும் பாடசாலைகளிலுள்ள மக்கள் நலன்புரி நிலையங்களுக்கு மாற்றப்படுவர்.

இவ் நலன்புரி நிலையத்துக்கான நீர் வேம்பிராய் குடிநீர் கிணறு, நாவற்குழி உணவுக் களஞ்சியம், மற்றும் நாவற்குழி வீட்டுத்திட்டத்திலுள்ள கிணறுகள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

60 வயதிற்கு மேற்பட்ட 22 வயோதிபர்கள், சுகவீனமுற்றவர்களும் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

மேலும் 150 வயோதிபர்கள் நலன்புரி நிலையங்களிலுள்ள உறவினர்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

நலன்புரி நிலையங்களிலுள்ளவர்களை அவர்களின் உறவினர்கள் சந்திப்பதற்கும் நலன்புரி நிலையங்களுக்கு தொலைபேசி வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஒருசில தினங்களில் இவை சாத்தியமாகும் எனவும் அரச அதிபர் மேலும் கூறினார். (ச)

## புலிகளின் தலைவர்...

தப்பிவிடக் கூடும் என்பதால் இலங்கை கடற்படை உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வடக்கு இலங்கையில் முல்லைத்தீவைச் சுற்றிலும் இராணுவமும் கடற்படையும் நிறுத்தப்பட்டுள்ளது.

வன்னியில் உள்ள அடர்ந்த வனப்பகுதியில் பிரபாகரன் மறைந்திருப்பார் என்று சந்தேகிக்கப்படுகிறது. அவரை உயிருடன் பிடிப்பதற்கான நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.

எஞ்சியுள்ள தமிழர்களை கேடயமாக வைத்துக்கொண்டு பிரபாகரன் சண்டையிடுவதாக சந்தேகிக்கிறோம். அவருடன் மொத்தமாக 800 முதல் 900 விடுதலைப் புலிகள் வரை இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

எனினும் எதிர்ப்புக் கடுமையாக இருக்கும் என்பதால் அங்குலம் அங்குலமாக முன்னேறி வருகிறோம். ஒரு பக்கம் தொடர்ந்து சண்டை நடந்தாலும் புலிகள் வசம் உள்ள பகுதியில் உள்ள தமிழர்களின் உயிருக்கு ஆபத்து நேராமல் இருப்பதற்காக அவர்களை பத்திரமாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம் என்று தெரிவித்தார்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் கடற்பரப்பில் அதிகளவிலான கடற்படைப் படகுகள் நேற்று வியாழக்கிழமை நிறுத்தப்பட்டுள்ளன. கரையில் இருந்து அப்பகுதி மக்களின் கண்களுக்கு தெரியும் தூரத்தில் கடற்படையினரின் போராப் பீரங்கி, தாக்குதல் மற்றும் சுகர் படகுகளும் நிறுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ச-3,5,14)

## விஜய்...

பாதுகாப்பு சபையில் அதிகாரபூர்வமற்ற கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தின் போது சிறிலங்காவுக்கு பயணம் மேற்கொண்டது தொடர்பாக நம்பியார் அறிக்கை சமர்ப்பிப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவர் அதற்கு மறுப்பு தெரிவித்தது அங்கு பலத்த ஆச்சரியத்தினை ஏற்படுத்தியிருந்தது. பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்புரிமை உள்ள ஐந்து நாடுகளில் ஒரு நாடு நம்பியாரின் இந்த நிலைப்பாட்டை நேரடியாக எதிர்த்திருந்தது.

அதன் பின்னர் நேற்று மீண்டும் நடைபெறவிருந்த அதிகார பூர்வமற்ற பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்க நம்பியார் சம்மதம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## இந்திய அரசின் கோரிக்கை...

தமிழ் மக்களை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக மோதல்களை நிறுத்துமாறு தாம் இலங்கை அரசாங்கத்திடமும் விடுதலைப் புலிகளிடமும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்ததாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் இராணுவ ரீதியான தீர்வொன்றை தேர்ந்தெடுத்ததன் மூலம் கொழும்பே கூடுதலான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளது என மக்களவைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த சிதம்பரம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பிரச்சினை இராணுவத்தால் தீர்க்க முடியாது. பேச்சுவார்த்தை மூலமே இது தீர்த்து வைக்கப்படவேண்டும்.

ஏனைய சமூகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் சம உரிமைகள் தமிழர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

தமிழர்கள் செறிந்துவாழும் இரண்டு மாகாண சபைகளிலும் சமஷ்டி அடிப்படையில் உரிமைகள் வழங்கப்படவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தக்கோரி திராவிட முன்னேற்றக் கழகத்தால் நேற்று நடத்தப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் குறித்து கருத்துத் தெரிவித்த மத்திய உள்துறை அமைச்சர், இந்த வேலைநிறுத்தப்போராட்டம் மத்திய அரசாங்கத்துக்கு எதிரானதல்ல.

இலங்கையில் பாதிக்கப்பட்டிருக்கும் அப்பாவித் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்க வலியுறுத்தியே இது நடத்தப்படுகிறது என்றார். (ச-5)

## வன்னியில்...

கடந்த மூன்று நாட்களில் கத்தோலிக்கத் திருச்சபையின் மூன்று அருட் தந்தையர்கள் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


**Brown & Co.Ltd**

**வாடிக்கையாளர்களுக்கு**

**ஓர் இடமாற்ற அறிவித்தல்**

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு இதுவரை காலமும் 89, ஸ்ரான்லி வீதி, யாழ். என்னும் முகவரியில் இயங்கி வந்த எமது கிளை காட்சியறை 20.04.2009 தொடக்கம் 62/16, ஸ்ரான்லி வீதி, (C.S.P. கொமர்ஷல் வங்கி அருகாமையில்) யாழ். என்னும் முகவரியில் இடமாற்றம் பெற்று இயங்கி வருகின்றது என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

*அனைவரினதும் அன்பான ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். நன்றி*

தொடர்புகளுக்கு: 0212224040

-முகாமையாளர்.

(C-2412)


# இலங்கைப் பிரச்சினையில்...

இலங்கை போர் பகுதியின் செயற்கோள் படங்களை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. வன்னிப் பகுதியில் தமிழர்கள் 25 ஆயிரம் கொட்டகைகள் அமைத்து வாழ்வது அதில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவம் கடுமையான தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் அப்பாவித் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் பலியாகி வருகின்றனர். இந்த இனப்படுகொலையை தடுத்து நிறுத்த உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கையில் போர்ப் பகுதியில் எடுக்கப்பட்ட தனது செயற்கோள் படங்களை அமெரிக்கா வெளியிட்டுள்ளது. அதில் சுமார் 8 சதுர மைல் அளவுள்ள இடத்தில் அப்பாவித் தமிழர்கள் 25 ஆயிரம் கொட்டகைகளை அமைத்து அதில் வசிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொட்டகைகளின் எண்ணிக்கையை வைத்து அங்கு சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தமிழர்கள் இருப்பார்கள் என அமெரிக்கா கணித்துள்ளது.

ஆனால் அதைவிட அதிக எண்ணிக்கையில் தமிழர்கள் அந்தப் பகுதியில் உணவின்றி தவித்து வருகின்றனர்.

அதேபோல் இலங்கை இராணுவத்திடம் போர் நிறுத்தம் செய்ய கோரிக்கை விடுத்தோம். அவர்கள் அதை மறுத்துவிட்டனர். விடுதலைப் புலிகளிடம் தமிழர்களை பாதுகாப்புப் பகுதிக்கு வெளியேற அனுமதிக்கச் சொன்னோம். ஆனால் அதுவும் நடக்கவில்லை.

இந்நிலையில் அடுத்த 48 மணிநேரத்தில் இலங்கையில் திருப்பம் ஏற்படும் என எதிர்பார்க்கிறோம் என அமெரிக்க வெளியுறவு அமைச்சக அதிகாரி மைக்கல் ஓவன் தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் றொபேட் உட் கூறுகையில்,

வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், இலங்கையில் போர் முடிவுக்கு வந்தவுடன் அங்கு செய்யப்படவேண்டிய மறுமலர்ச்சி திட்டம் குறித்து யோசித்து வருகிறார் என்றார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.